# தமிழரசு

ஏப்ரல் 16-30, 1999 ரூ.3









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra.TNSACS:6259:98

# இந்த இதழில்


★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு .................. 2
★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவுகள் .................. 8
★ பொதுப்பணித்துறையின் போற்றத்தக்கப் பணிகள் .................. 13
★ சாதனைப் புரியும் சாலைப் போக்குவரத்து .................. 17
★ பெரியார் நினைவு சமத்துவபுரம், ஏனாத்தூர் .................. 22
★ பால் உற்பத்தி பெருக்குவோம் .................. 28
★ டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாப் பேருரை .................. 31
★ திருவள்ளூர் மாவட்டத்தில் முதல்வர் .................. 36
★ பாவேந்தரின் சமுதாய நோக்கில் கலைஞரின் சமூக நேயச் செயலாக்கங்கள் .................. 37
★ பிற்படுத்தப்பட்டோர் நலன் .................. 41
★ கால்நடை பராமரிப்பு .................. 45


## திருக்குறள்

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

தமக்குள்ள வறுமைத் துன்பத்தைக் காட்டிக்கொள்ளாமல் பிறருக்கு ஈவது உயர்ந்த குடிப்பிறந்தவரின் பண்பாகும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

<u>முதல் பக்க அட்டையில்</u>

எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

<u>கடைசிப் பக்க அட்டையில்</u>

காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு – 2030

சித்திரை

ஏப்ரல் 16–30, 1999

மலர் : 30 இதழ் : 20

விலை ரூ.3

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாடு

## முதலமைச்சர் கலைஞர் உரை

**1996** ஆம் ஆண்டு மே திங்களில் அமைந்த இந்த அரசுக்கு மூன்று ஆண்டுகள் நிறைவு பெறவிருக்கும் நிலையில், 1999–2000 ஆண்டின் நிதிநிலை அறிக்கையைச் சட்டப்பேரவையில் அளித்து – நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களை வரையறுத்து – தமிழக மக்களின் சமூக – பொருளாதார மேம்பாட்டிற்குரிய திட்டங்களைத் தொடர்ந்து தொய்வின்றிச் செயல்படுத்திட முனையும் வேளையில் – கடந்த காலச் செயல்பாடுகள் குறித்து ஆராயவும், அடுத்து நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்துத் திட்டமிடவும் இங்கே கூடியுள்ளோம்.

ஊழலற்ற ஒளிவு மறைவு இல்லாத, திறமையான நிர்வாகத்தை (Administration - free from corruption, transparent and efficient) வழங்கிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் குறிக்கோள்.

இந்த மூன்றாண்டு காலத்தில் இக்குறிக்கோளை எய்துவதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோமென்றாலும் ஒருசில அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், இந்த அரசின் மேல்மட்டத்தில் ஊழல் இல்லை; ஆனால் கீழ் மட்டத்தில் ஊழல் முழுமையாக இன்னும் ஒழியவில்லை என்று சொல்லி வருகின்றன. இந்த விமர்சனத்தில் துளியேனும் உண்மை இல்லை என்று அப்படியே ஒதுக்கி விட முடியாது.

கீழ்மட்டத்தில் (At the cutting edge level) தவறுகள் நடக்குமாயின் அது மாவட்ட ஆட்சியர்களின், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் பணித் திறனுக்கு விடப்பட்ட அறைகூவலாகக் கருதி தடுத்து நிறுத்திட வேண்டும்.

அதைப் போலவே எங்கே தவறு நடந்துவிடுமோ என அஞ்சி, எதையும் செய்யாமல் காலத்தைக் கழிப்பதும் கொடுமையானதாகும். ஊழலைவிடக் கொடுமையானது, கடுமையானது – தனக்கு தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிக்க முயற்சி செய்வதாகும் (Escaping from responsibilities) எனவே, ஒரு பொறுப்பில் ஒரு அலுவலர் எவ்வளவு காலம் இருந்தார் என்பது பெருமை அல்ல; எப்படிப் பணி ஆற்றினார், எவ்விதம் தன் பொறுப்புகளை நிறைவேற்றினார் என்பதுதான் பெருமை தருவதாகும். எனவே பணித்திறன் மதிப்பீடு (Performance Assessment) இந்தத் திசையில்தான் அமையும் என ஏற்கனவே நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் நான் குறிப்பிட்டதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

### *சட்டம் ஒழுங்கு*

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்படுவதன் மூலம்தான் அரசு வகுக்கும் திட்டங்களின் பயன்கள் முழுமையாக மக்களைச் சென்றடைய முடியும்.

கடந்த ஆண்டில் சட்டம்–ஒழுங்கையும், சமுதாய ஒற்றுமையையும் சீராகப் பராமரித்திட அரசு தொடர்ந்து எடுத்த உறுதியான நடவடிக்கைகளினாலும், மதங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்க உணர்வுகளை வளர்ப்பதில் செலுத்திய ஆழ்ந்த அக்கறையினாலும் கடந்த பல ஆண்டுகளாக, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் நிகழ்ந்து வந்த சாதிக் கலவரங்கள், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த ஓராண்டில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நிகழாமல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

**22.10.1998** மற்றும் **26.10.1998** ஆகிய நாட்களில் அரசு நடத்திய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், வன்முறையைத் தூண்டுகிற சுவரொட்டிகள்/துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றை ஆங்காங்கே ஒட்டுவதிலும், விநியோகிப்பதிலும் ஈடுபடுகிற சாதி சமய அமைப்புகளின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### *சமுதாய நல்லிணக்கம்*

வன்முறையைத் தூண்டக் கூடிய பேரணிகள், ஊர்வலங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாமென்றும், அனுமதியின்றிப் பேரணிகள், ஊர்வலங்கள் நடத்த முற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும்



மாவட்ட நிர்வாகத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள், சாதிக் கலவரங்களைத் தூண்டுபவர்களையும், வன்முறையாளர்களையும் ஒடுக்குவதில் பெருமளவில் பயனளித்துள்ளதால், இந்த ஆணைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் மாவட்ட நிர்வாகங்கள் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

சமுதாய நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் கிராம அளவில் ஊராட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, அனைத்துக் கிராமங்களிலும் அமைதிக் குழுக்களை ஏற்படுத்துமாறும், குறைந்தது மூன்று திங்களுக்கு ஒருமுறை அக்குழுக்களின் கூட்டங்களை நடத்துமாறும், அதைத் தவிர இடையில் தேவைப்படும்போதெல்லாம் இக்குழு கூடிட வேண்டுமென்றும், அரசு 9.11.98 அன்று ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தீண்டாமையை ஒழிப்பதிலும், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் இந்த அமைதிக் குழுக்களின் செயல்பாடு குறித்து உங்களிடமிருந்து கருத்துகளை எதிர்பார்க்கிறேன்.

### *கள்ளச்சாராயம் ஒழிப்பு*

கள்ளச்சாராயம் காய்ச்சுவது, விற்பது, போலி மற்றும் இரண்டாம் தர மதுபானங்களைத் தயாரித்து விற்பது போன்ற நடவடிக்கைகளை அறவே ஒழித்திட வேண்டும் என்பதற்காக, 1998 ஜூன் மாதத்தில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராய மதுபானங்கள் தயாரிக்க பயன்படுத்தப் படும் மெத்தனால், தெளிந்த சாராவி, கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகியவற்றின் போக்குவரத்தைத் தீவிரமாக கண்காணிப்பதுடன், இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கிடும்வகையில் இந்த மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு மிகுந்த விழிப்புடன் செயல்பட வேண்டும்.

### *மினிபஸ் திட்டம்*

கடந்த ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள மினிபஸ் திட்டம் கிராமப்புற மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கிராமப்புற மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய இத்திட்டத்தினை நன்முறையில் செயல்படுத்திட மாவட்ட ஆட்சியர்கள் ஆர்வம் காட்டிட வேண்டும். சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் காரணமாக, இதன் முன்னேற்றத்தில் ஒரு தடை ஏற்பட்டுள்ளது.

எனினும், இது குறித்த வழக்கினை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இந்நிலையில் இந்த மினிபஸ் திட்டம் மேலும் சிறப்புடன் நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### *கணிப்பொறிக் கல்வி*

கணிப்பொறிக் கல்வியில் தமிழக இளைஞர்களின் திறன்கள் படிப்படியாக வளர்க்கப்பட வேண்டும் எனும் நோக்கில் இந்த ஆண்டு முதல் 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பாடமுறை ஒரு விருப்பப் பாடமாகத் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டம் முறையாகச் செயல்படுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த முனைப்புடன் பணியாற்றிட வேண்டும்.

கணிப்பொறிக் கல்வி வெற்றிகரமாக அமைவதற்குரிய அடிப்படை வசதிகள், கற்பிக்கத் தேவையான கணினிகள் நிறுவுதல், பயிற்றுநர்கள் பணி அமர்த்துதல் போன்றவற்றை மாவட்ட ஆட்சியர்கள் மேற்பார்வையிட வேண்டும்.

சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் தொடக்கக் கல்வி சென்றடைய வேண்டுமென்ற நமது கொள்கையை நிறைவேற்றுவதற்கு தொடக்கப் பள்ளி இல்லாத சிற்றூரே இல்லை என்ற நிலையை இந்த ஆண்டு இறுதிக்குள் ஏற்படுத்திட முடிவு செய்துள்ளோம். இதற்குத் தேவைப்படும் இடங்களில் பள்ளிகளைத் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உதவிட வேண்டும்.

இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடை போன்றவை பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இவை கோடை விடுமுறைக்குப்பின், பள்ளி திறக்கும் காலத்திலேயே வழங்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முகாம்கள் ஒரு மக்கள் இயக்கமாக எழுச்சி பெறும் அளவிற்கு தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே, இந்த முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் – வட்டார அளவில் நடைபெற மாவட்ட ஆட்சியர்கள் ஆவன செய்திடவேண்டும்.

பள்ளிப் படிப்பை முடித்தபின் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் போன்ற பல்வேறு சான்றிதழ்கள் மேற்படிப்பிற்காகவும், வேலை தேடுவதற்காகவும் தேவைப்படுகின்றன. இச்சான்றிதழ்களைப் பள்ளிகள் மூலமாகவே கல்விச் சான்றிதழ்களுடன் சேர்த்து வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இந்த முடிவுக்கு ஏற்ப மாணவர்களுக்கு இச்சான்றிதழ்களை கல்விச் சான்றிதழுடன் சேர்த்து குறித்த காலத்தில் விழா ஒன்றின் மூலமாக வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



இத்துடன் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் படிப்பு உதவித் தொகைகளும் உரிய காலத்தில் வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திடல் வேண்டும்.

### *தொடக்கக் கல்வி இயக்கம்*

பெண் குழந்தைகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதில் முழுமையான நிலையை எய்துவதற்காக "தொடக்கக் கல்வி இயக்கம்" என்னும் சிறப்புத் திட்டத்தை இந்த ஆண்டில் செயல்படுத்தவுள்ளோம்.

14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பள்ளிகளில் சேர்ந்து தொடர்ந்து கற்பதற்கு உதவும் வகையில் கல்வியின் அவசியம் குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடம் வளர்ப்பதற்காக – பள்ளி திறப்பதற்கு முன்பாக வரும் மே திங்களில் – உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வியில் அக்கறைகொண்ட பொதுமக்கள், கிராம சபையினர், ஆசிரியர்கள், மக்கள் நலப்பணியாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இந்த

விளையாட்டுகளையும், போட்டிகளையும் பள்ளிகளில் சிறப்பான முறையில் நடத்திட அரசு விரும்புகின்றது. இதற்காக கால்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், கபடி, ஹாக்கி, ஓட்டப்பந்தயங்கள் போன்ற அனைத்து முக்கிய விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவிலான போட்டிகளையும் தொடர்ந்து மாவட்டங்களுக்கு இடையிலான – மாநில அளவிலான போட்டிகளையும் நடத்திட அரசு முடிவு செய்துள்ளது. இந்த விளையாட்டுப் போட்டிகள் ஆங்காங்கே எழுச்சியுடன் நடைபெறவும், மாணவ மாணவியரிடையே விளையாட்டுத் திறன்களை வளர்த்திடவும் மாவட்ட ஆட்சியர்களும், காவல் துறை அதிகாரிகளும் உதவிட வேண்டும்.

### *வாழ்வொளித் திட்டம்*

அரசு அறிவித்துள்ள வாழ்வொளித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலரும் வாரத்தில் ஒருநாள் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, இருதயம், பற்கள், தொழுநோய், கண்பார்வை, இரத்த சோகை போன்ற நோய்களுக்கான அறிகுறிகள் உள்ளனவா எனக் கண்டறிந்து – தக்க

சிகிச்சை அளிக்கவும், முற்றிய நிலையில் நோய் இருப்பின் மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பிச் சிகிச்சைகளைத் தொடரவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1972–73இல் கண்ணொளி வழங்கும் திட்டம் தமிழகம் முழுவதும் மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்பட்டு ஏழை எளியவர் பலர் பயன்பெற்றதை நீங்கள் நன்கறிவீர்கள். அத்திட்டத்தில் இடையில் ஏற்பட்ட தொய்வைப்போக்கி, கண்மருத்துவ சிகிச்சை வசதிகள் பொது மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டும். இந்த ஆண்டில் கண்புரை நோயுள்ளவர்களில் 3.75 இலட்சம் பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்து, புரை நீக்குவதுடன், அவர்களில் ஒரு இலட்சம் பேருக்கு கண் உள் ஆடி (Intra-ocular lens) பொருத்தவும் அரசு முடிவெடுத்துள்ளது.

இதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி ஏழை எளியவர் கண்ணொளி பெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### *சமத்துவபுரங்கள்*

சாதிமத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி மத நல்லிணக்கத்தையும், மனித நேயத்தையும் வளர்த்திடும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின் கீழ் இதுவரை 35 கோடி ரூபாய் செலவில் 100 சமத்துவபுரங்களை உருவாக்கிட அனுமதிக்கப்பட்டு, 16 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சமத்துவபுரங்களும் தொடர்ந்து திறந்து வைக்கப்படவுள்ளன. இந்த ஆண்டில் 17.50 கோடி ரூபாய் செலவில் மேலும் 50 சமத்துவபுரங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் அனைத்தும் முழு வெற்றி பெற்றிடும் வகையில் – சிறப்பாகவும், விரைந்தும் செயல்படுத்தப்படுவதற்கு உகந்த வகையில் மாவட்ட ஆட்சியர் அனைவரும் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

மனிதக் கழிவினை மனிதனே அகற்றும் மனித நேயமற்ற செயலினை மாற்றி – அவர்கள் விரும்பும் மதிப்புடைய தொழிலினை மேற்கொள்ள வழிவகை செய்வதற்காக – ஒரு சட்டமுன்வடிவினை விரைவில் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது. இத்தகையோருக்கு வழங்கப்படவுள்ள மறுவாழ்வு பணிகளில் மாவட்ட ஆட்சியர்கள் முனைப்புடன் ஈடுபட வேண்டும்.

மேலும், தற்போது தம்முடைய மாவட்டங்களில் உள்ள உலர் கழிப்பிடங்கள் எத்தனை என்பதனைக் கணக்கிட்டு, அவற்றை நீர்வசதியுடன் கூடிய கழிவறைகளாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

### *தரிசு நில மேம்பாடு*

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 15 விழுக்காடு தரிசு நிலமாகும். இத்தரிசு நிலங்களின் தன்மை அறிந்து அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில்தான் தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் ஏழ்மை நிலையில் வாழும் மக்களின் எதிர்காலம் அடங்கியுள்ளது. அதற்கான ஆக்கப் பணிகளை வரையறுத்துச் செயல்படுத்திட வல்லுநர்கள் கொண்ட தரிசுநில மேம்பாட்டு ஆணையம் ஒன்று அமைக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த நிதியாண்டில் 10 ஆயிரம் எக்டேர் பரப்பில் தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான – வரலாற்றில் இடம்பெறும் 'திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் முனைப்புப் பணிக்குழு (District Level Task Force) ஒன்றை ஏற்படுத்தி தரிசு நிலங்கள் அடங்கிய விவரப் பட்டியலை உடனடியாகத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### *மகளிர் சிறுவணிகக் கடன் விரிவுபடுத்தப்படும்*

நகர்ப்புறங்களில் பூ வியாபாரம், காய்கறி வியாபாரம், பழ வியாபாரம், இட்லி கடை, பெட்டிக்கடை முதலிய சிறுவணிகங்களில் ஈடுபட்டுள்ள ஏழை எளிய மகளிர் அனைவரும், கந்துவட்டிக்காரர்களிடம் கடன் வாங்கி, தமது உழைப்பு முழுவதையும் பறிகொடுக்கக்கூடிய அவல



நிலையில் இருப்பதை மாற்றிட – அவர்களுக்குக் குறைந்த வட்டியில் வங்கிகள் மூலம் கடன் வழங்கி – நாள்தோறும் அவர்கள் திருப்பித் தரும் தொகையில் ஒரு பகுதியை சேமிப்பாகவும் சேர்த்துவைத்து – கடன் முடிந்ததும் சேமிப்புக்கு வட்டியையும் சேர்த்து அவர்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அரிய திட்டமாக – மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் 1.1.1999 அன்று சென்னையில் தொடங்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள 6 மாநகராட்சிகளிலும் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் தமிழகத்தின் மற்ற நகரங்களுக்கும் 2.5.99 முதல் விரிவுபடுத்தப்படவுள்ளது.

வளர்ச்சியை ஏற்படுத்திட "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும்", மக்களை நேரடியாக திட்டப் பணிகளில் ஈடுபடுத்திட "நமக்கு நாமே" திட்டத்தையும் அறிவித்தேன். இத்திட்டங்களின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து கொண்டு மாவட்ட ஆட்சியர்கள் செயல்பட்டு வருவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட 212 கிராம ஊராட்சிகளுள் 162 கிராம ஊராட்சிகளில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 29,679 பணிகளில் 28,832 பணிகள் முடிக்கப்பட்டு இன்னும் 847 பணிகளே



இதுவரை 6584 ஏழை மகளிர் தமது வணிகத் தேவைகளுக்கு 48 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் கடன் உதவி பெற்றுள்ளனர். குடும்ப சேமிப்புகள் பெருக வழிவகை செய்யும் இப்புதிய முயற்சி பொது மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்று வருகிறது.

மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்தி ஏழை மகளிர் பொருளாதார மேம்பாட்டுக்கான இப்பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும்.

### *திருமண நிதி உதவித் திட்டம்*

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்ட நிதி உதவி 1996ஆம் ஆண்டில் 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, மூன்றாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் மகளிர் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டில் 70 ஆயிரம் பெண்கள் பயன்பெற 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயன் எய்திட நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு வரை உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் வழங்கப்படும் தொகை முழுவதும் முழு அளவில் உரியவர்களுக்கு – உரிய காலத்தில் சென்றடைதல் வேண்டும்.

### *அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்*

1997ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை ஒருமுகப்படுத்தி – ஒருங்கிணைந்த கிராமப்புற

நிலுவையில் உள்ளன. 1998–99ஆம் ஆண்டில் மொத்தமாக எடுக்கப்பட்ட 23,206 பணிகளில் 18,587 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நிலுவையாக உள்ள பணிகளை மே மாத இறுதிக்குள் முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

### *நமக்கு நாமே திட்டம்*

"நமக்கு நாமே" திட்டத்தில், 1997–98ம் ஆண்டு எடுக்கப்பட்ட 4,932 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 1998–99ம் ஆண்டு எடுக்கப்பட்ட 4,790 பணிகளில் 3,047 பணிகள் மட்டும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 1997–98ம் ஆண்டில் ரூ.6.90 கோடியாக இருந்த மக்கள் பங்கு, 1998–99ம் ஆண்டில் ரூ.12.36 கோடியாக ஏறத்தாழ இருமடங்கு உயர்ந்துள்ளது.

இப்பணியினை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி மக்கள் பிரதிநிதிகளை அதிகமாகப் பங்குகொள்ளச் செய்து, திட்டப்பணிகளை நிறைவேற்றுவதில் அரசுக்கும், மக்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்பதே இந்த அரசின் குறிக்கோள்.

இந்த ஆண்டு நமக்கு நாமே திட்டத்தை நகர்ப்புறத்திலும் அறிமுகம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது.

மாவட்ட ஆட்சியர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களையும் பொதுமக்களையும், சமூகசேவை அமைப்புகளையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அடிக்கடி சந்தித்து

மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்து அதன்மூலம் வளர்ச்சித்திட்ட பணிகளில் பொது மக்கள் மேலும் அதிக அளவில் பங்குகொள்வதற்கு ஊக்கமளித்திட வேண்டும்.

***ஊரக வளர்ச்சித் திட்டம்***

பொதுவாக ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளில் இருந்த தேக்க நிலை சென்ற மூன்று ஆண்டுகளில் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. 13.5.96 அன்றைய தேதியில் நடத்திய கணக்கெடுப்பின்போது நிலுவையிலிருந்த 1,17,141 பணிகளுடன் சென்ற 3 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட 5,84,906 பணிகளையும் சேர்த்து மொத்தமாக எடுக்கப்பட்ட 7,02,057 பணிகளில் 6,51,756 பணிகள் 1999 மார்ச் இறுதி வரை முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையாக 50,301 பணிகள் மட்டும் உள்ளன. சராசரியாக 92.84 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

***தொகுப்பு வீடுகள்***

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசு கட்டுவதற்கு அனுமதி வழங்கிய தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 74 ஆயிரத்து 264.

கடந்த ஆட்சியில் நிலுவையில் இருந்த தொகுப்பு வீடுகளையும் சேர்த்து மொத்தம் 2 இலட்சத்து 57 ஆயிரத்து 751 வீடுகள் கட்டப்பட வேண்டியிருந்ததில், கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசு கட்டி முடித்துள்ள தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 42 ஆயிரத்து 645 ஆகும்.

1999–2000ஆம் ஆண்டில் மேலும் 46,000 தொகுப்பு வீடுகளைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

***கிராம சபை***

திட்டங்கள் வெளிப்படையான முறையில் செயல்பட வேண்டுமானால் பஞ்சாயத்து அமைப்புகள் மக்கள் குறையறிந்து – அவற்றை உடனுக்குடன் நிறை வேற்றுவதில் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டும். நிர்வாக அமைப்பு, முறையாக செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் உரிமை மக்களுக்கு உள்ளது.

அதனால்தான், கிராமசபை மூலம் இந்த உரிமையை மக்கள் உணரவேண்டும் என்றும், குறிப்பாக சமூகத் தணிக்கை முறையைச் செயல்முறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். மத்திய அரசு இந்த ஆண்டை கிராமசபை ஆண்டாக அறிவித்துள்ளதை நினைவில் கொண்டு, கிராமசபை சிறப்பாகச் செயல்பட மாவட்ட ஆட்சியர்கள் வழிகாட்டும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

***சிறுசேமிப்பு***

மக்களுக்குத் தேவையான சமூக பொருளாதார அடிப்படையிலான திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதற்குத் தேவையான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியில் சிறுசேமிப்பு முக்கிய பங்கை வகிக்கின்றது.

1998–99ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய சிறுசேமிப்புக் கடனாக 800 கோடி ரூபாய் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனடிப் படையில் 1998–99ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் நிகர சிறுசேமிப்பு இலக்கு 1400 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. 1998–99ஆம் ஆண்டில் பிப்ரவரி திங்கள் முடிய மாநிலத்தின் நிகர சேமிப்பு வசூல் 719.50 கோடி ரூபாயாகும்.

1999ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய, திருநெல்வேலி, கன்னியாகுமரி, வேலூர் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சியாளர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட ஆண்டு இலக்கில் 75 விழுக்காட்டுக்கு மேல் எய்தி சாதனை புரிந்துள்ளனர்.

1999–2000ஆம் ஆண்டுக்கு மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய சிறுசேமிப்புக் கடன் என்ற வகையில் 800 கோடி ரூபாய் வரவு என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ப இந்த நிதியாண்டுக்கு மாநில சிறுசேமிப்பு வசூல் இலக்கை 1600 கோடி ரூபாயாக அரசு நிர்ணயித்துள்ளது.

மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னை மாநகராட்சி ஆணையாளரும் தீவிர முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு இந்த ஆண்டு தங்களுக்கு விதிக்கப்பட்ட இலக்கை எய்துவதற்குப் பாடுபடவேண்டும். ஆண்டின் இறுதியில் இலக்கின் பெரும் பகுதியை சிரமத்துடன் எய்துவதை விட ஆண்டு முழுவதும் மாதாந்திர இலக்குகளை சீரான முறையில் எய்திடும் வண்ணம் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னை மாநகராட்சி ஆணையாளரும் இப்பொழுதிருந்தே நன்கு திட்டமிட்டு செயலாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திட்டப் பணிகளை நிறைவேற்றும்போது, எந்தத் துறையிலாவது முன்னேற்றம் இல்லாமல் சுணக்கம் காணப்பட்டால் அதுகுறித்து அத்துறை அலுவலருக்கு அறிவுரை கூறிப் பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். மேலும், "முதலமைச்சர் வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு" விற்கும் தகவல் தெரிவிக்க வேண்டும். இதனை மிக முக்கியமாக நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இத்தகைய ஆய்வுப் பணிகள் – ஒவ்வொரு வட்டாரத்திலும் மேற்கொள்ளப்பட்டு, தடைகள் இருப்பின், அவை உடனுக்குடன் அகற்றப்பட்டு, வளர்ச்சித் திட்டப் பணிகளின் பயன்கள் மக்களுக்குக் கிடைப்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளின் அடிப் படையில் உங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறிட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

–மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
17.4.99 அன்று தொடங்கிய
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்-காவல் துறை
அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரை.

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள்



**17**, 18-4-99 ஆகிய நாட்களில் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

### சட்டம் ஒழுங்கு

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி முதலில் விரிவாகப் பேசப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் தங்கள் மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு நிலை தற்போது திருப்திகரமாக இருப்பதாகத் தெரிவித்தனர். இறுதியில் முதலமைச்சர் கலைஞர் தொடர்ந்து மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிப்பாக இருந்திட வேண்டும் என்றும், ஏதாவது சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனடியாக தனது கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றும் கூறினார்.

### இரண்டு குவளை முறை

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், உள்ளூர் டீ கடைகளில் இரட்டைக் குவளை முறை பழக்கத்தில் இருப்பது தெரியவந்தால் மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் கொடுக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு உள்ளூர் செய்தித்தாளில் விளம்பரம் ஒன்றை கொடுக்க வேண்டும்; விளம்பரத்தைத் தொடர்ந்து தங்களுக்கு வருகின்ற தகவல்களை சரிபார்த்து, விசாரித்து இன்னமும்கூட எங்கெங்கு இரட்டைக் குவளை முறை பின்பற்றப்படுகிறதோ அங்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், மாவட்டத்தில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கிட வேண்டும். தங்கள் மாவட்டத்தில் இரட்டைக் குவளை முறை பின்பற்றப்படுகிறதா என்ற உண்மை நிலையை அவர்களிடம் விளக்கி, இரட்டைக் குவளை முறை இல்லாத இடங்களில் தவறான தகவல்களை பரப்புவதனால் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அத்தகைய வீணான புகார்களை பரப்பவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தினார்.

உண்மையிலேயே இரண்டு குவளை முறை பின்பற்றப்படும் ஊர்களில் அந்த ஊரில் உள்ள பெரியவர்கள் மற்றும் டீ கடை உரிமையாளர்களை அழைத்து பேசி இதற்கு தக்க முடிவு காணவேண்டும் என்றும்; இரண்டு குவளை முறையை அறவே ஒழிக்க மாவட்ட ஆட்சியர்கள் அதிக கவனம் செலுத்தி எச்சரிக்கையுடன் பிரச்சினையைக் கையாண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

### கள்ளச்சாராய ஒழிப்பு

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் / விற்பவர்களை குண்டர்கள் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைத்து ஆணையிடும்போது அதனைச் செய்தியாக பத்திரிகைகளில் வெளியிட்டால் பிறருக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் கள்ளச் சாராயம் விற்பவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பதால், இது குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எண்ணிக்கையைத் தான் கூட்டுமே தவிர, கள்ளச் சாராய வியாபாரத்தை ஒழிக்க முடியாது என கருத்து தெரிவித்த முதலமைச்சர் அவர்கள், வசதி படைத்த, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீதும் குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும், கள்ளச்சாராயத்தை ஒழிக்க, கள்ளச்சாராயம் தயாரிப்பதில் என்னென்ன அருவருக்கத்தக்க பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் தயாரிக்கும் முறை பற்றியும்

துண்டுபடம் (Documentary Film) எடுத்து பொது மக்களுக்கு தெரியப்படுத்தினால். கள்ளச்சாராய வியாபாரமும் அதனால் ஏற்படும் மரணங்களும் குறைய ஏதுவாகும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்த கருத்தை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர், செய்தி விளம்பரத்துறை மூலமாக பத்து நிமிடங்கள் ஓடும் படம் ஒன்றை எடுத்து வெளியிடலாம் என்று கருத்து தெரிவித்தார்.

மாவட்டங்களில் IMFL விற்பனை பற்றி மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்து விற்பனை எங்கு குறைவாக உள்ளதோ அங்கு கள்ளச்சாராய விற்பனைக்கு இடமிருக்கலாம் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கை பேணிக்காக்கவும், கள்ளச்சாராயத்தை ஒழிக்கவும் மாவட்டத்தில் முக்கியமான இடங்களில் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ காவல் துறை கண்காணிப்பாளர்கள் தலைமையில் ஆய்வாளர்களின் கூட்டத்தைக் கூட்டி, சட்டம் ஒழுங்கு பேணுதல், கள்ளச் சாராயத்தை ஒழித்தல் மற்றும் காவல் நிலைய மரணங்கள் நிகழாவண்ணம் தடுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும், இதற்கான ஆணைகளை காவல்துறை இயக்குநர் பிறப்பிக்கலாம் என்றும் ஆணையிட்டார்.

அரசின் வருவாயைக் கருதி மதுபான விற்பனையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறையினர் ஆய்வு செய்ய வேண்டுமென்றும், மெதைல் ஆல்கஹால் (Methyl Alcohol), தெளிந்த சாராவி (Rectified Spirit) பயன்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்க வேண்டுமென்றும், கள்ளச்சாராயத்தை ஒழிக்க காவல்துறை தீவிரமாக செயல்பட வேண்டுமென்றும், குறிப்பாக பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

### சிற்றுந்து திட்டம்

சிற்றுந்து திட்டத்தைப் பற்றிய விரிவான விவாதத்திற்குப் பின் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பெர்மிட்டுகளைப் பயன்படுத்தி சிற்றுந்துகளை விரைவில் விட நடவடிக்கை எடுக்கும்படியும், மீதி உள்ள விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தயாராக வைத்திருக்கும் படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உயர்நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கினை விரைவுபடுத்தத் தேவையான சட்ட திருத்தத்தை கொண்டுவரவும் உள்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டம் கிராமப்புற மக்களுக்கு மிகுந்த பயன் அளிக்கும் திட்டமாகையால் இதில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆர்வம் காண்பிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

### பள்ளிக் கல்வி

மேல்நிலைப் பள்ளிகளில் கணினியியல் பாடம் அறிமுகப்படுத்தல்:-

- முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு பணிகள் முன்னேற்றம் ஆய்வு செய்யப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில், மாவட்ட அளவில் பணிகளை நிறைவேற்ற முனைப்புப் பணிக் குழு (Task Force) அமைக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.
- திட்ட நிறைவேற்றலில் ஒவ்வொரு கட்டத்தையும் முனைப்பாக மேற்பார்வையிடுமாறு முதலமைச்சர் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அறிவுறுத்தினார்.
- பள்ளிகளில் கணினிகளை நிறுவ, கட்டடங்களில் தேவையான சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டார்.



- தேவைப்படும் பள்ளிகளில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும்,பிற ஊரகவளர்ச்சிப் பணிகளின் கீழும் உடனடியாக வகுப்பறைகள் கட்டும் பணியை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், அவர்களின் வருவாயிலிருந்தும் இப்பணிகள் மேற்கொள்ளப்படலாம் என முடிவெடுக்கப்பட்டது.

- பள்ளிகளில் இருந்து மனு கிடைத்தவுடன், மின்சார வாரியம் 15 தினங்களுக்குள் மும்முனை இணைப்பு வழங்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

### தொடக்கக் கல்வி இயக்கம்

- மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தூண்டும் பணிகளை மேற்கொள்ள உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்றும்

- மாவட்ட அளவில் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கும் என்றும்

- மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி நிறுவனப் பிரதிநிதிகள், தன்னார்வு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஈடுபாட்டுடன் மக்கள் எழுச்சி இயக்கமாக செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேரவும், தொடர்ந்து பள்ளியில் பயிலவும் முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### சான்றிதழ்கள் வழங்கல்

- நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பத்தாம், பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிகள் மூலம் சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் பள்ளிச் சான்றிதழ்களுடன் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. சம்மந்தப்பட்ட அலுவலர்களின் உரிய விசாரணைக்குப் பின்னர், குறித்த காலத்தில் சான்றிதழ்கள் பள்ளிகளில் வழங்கவேண்டும்.

### பள்ளிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள்

- மாவட்ட ஆட்சியர் தலைமையில் "மாவட்ட பள்ளி விளையாட்டுக் குழு" அமைக்கப்படும்.

- ஒன்றிய அளவிலிருந்து மாநில அளவு வரை விளையாட்டுப் போட்டிகள் பள்ளிகளுக்கிடையே சிறப்பாக நடத்தப்பட வேண்டும்.

நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்களிடமிருந்து நன்கொடையும் உதவியும் பெற்று இப்போட்டிகளைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

### வாழ்வொளித் திட்டம்

வாழ்வொளித் திட்டத்தையும் கண்ணொளித் திட்டம் போன்று மாவட்ட ஆட்சியர்கள் நல்ல முயற்சி எடுத்து அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்களைச் சார்ந்த மருத்துவர்களையும் ஒருங்கிணைத்து எல்லோருடைய ஒத்துழைப்புடன் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

### கண்ணொளித் திட்டம்

தொடர்ந்து மருத்துவமனைகள் மூலமாக நடைபெறும் கண்ணொளி திட்டத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் நன்முறையில் விளம்பரப்படுத்தி ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை கண்ணொளி முகாம் பெரிய அளவில் நடத்த வேண்டும் என்றும் அப்போதுதான் கிராமப்பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் தெரியவந்து அவர்களும் பயனடைய முடியும் என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாவட்ட ஆட்சியர்கள் மாவட்டங்களுக்குத் திரும்பிய உடன் இத்திட்டம் குறித்து தனி கவனம் செலுத்தி முகாம்கள் நடத்தி, அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி ஆணையிட்டார்கள்.

### சமத்துவபுரம்

சமத்துவபுரங்களின் நுழைவாயிலில் உள்ள வரவேற்பு வளைவுகளில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்று எழுதப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்ட சமத்துவ புரங்களின் வரவேற்பு வளைவுகளிலும் "பெரியார் நினைவு" என்ற வாசகத்தை உடனடியாக சேர்க்க வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

சமத்துவபுரங்களில் சமுதாய நல்லிணக்கத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் யாரும் தனியாக வழிப்பாட்டு தலங்கள் கட்டிவிடாமல் மாவட்ட ஆட்சியர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், தேவைப்படின், சமுதாய கூடத்தில் வழிபாடு செய்யலாம் என்றும் சமத்துவபுரங்களில் பொதுவான சுடுகாடு இடுகாடுகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இச்சமத்துவபுர வீடுகளுக்கு சாலை போன்ற அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சியர்கள் அவ்வப்போது பார்வையிட்டு செய்து தர வேண்டும். சமத்துவபுர வீடுகளின் அறைகளுக்குக்

கதவு, ஜன்னல்கள் போன்ற வசதிகளும் மாவட்ட ஆட்சியர்கள் செய்து தரவேண்டும்.

சமத்துவபுரங்களில் எல்லா இனத்தவர்களும் ஒன்றாக குடியிருப்பது போல, இலவச வீட்டுமனைகள் வழங்கும்போது ஆதிதிராவிட நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் ஒருங்கிணைந்து வீட்டுமனைகளை எல்லா சாதியினருக்கும், மதத்தினருக்கும் கிடைக்கும் வகையில் சமத்துவபுர கோட்பாட்டினை கடைப்பிடித்து செயல்படுத்தலாம் என்றும் இத்தகைய செயல்பாடுகள், சாதி வேறுபாடுகள் நீங்க ஏதுவாகும் என்றும் தெரிவித்ததை, நல்ல கருத்து என்றும் இதனை செயல்படுத்தலாம் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

சமத்துவபுரம் மட்டுமன்றி அரசின் பிற திட்டங்களையும் செயலாக்கும் போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்தும் நல்ல திட்டங்களைப் பற்றி கலந்துபேசி அவர்கள் என்னென்ன முறையில் திட்டங்களைச் செயலாக்குகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு தங்களது மாவட்டத்திலும் அதுபோன்று நன் முறையில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

**பொது உலர்கழிப்பிடங்கள்**

மனிதக் கழிவினை மனிதனே அகற்றும் செயலை முழுவதுமாக நீக்க முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தினைச் செயல்படுத்துவதில் முதற்கட்டமாக, பேரூராட்சிகளின் எல்லைக்குட்பட்ட பொது உலர் கழிப்பிடங்கள் மற்றும் தனியார் குடியிருப்பில் உள்ள உலர்கழிப் பிடங்களை நீரூற்று கழிப்பிடங்களாக மாற்ற, நிதித்துறையுடன் கலந்தாலோசித்து நகராட்சித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.



**தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்**

தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆயிரம் ஹெக்டேர் என்ற வீதத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலங்களைத் தேர்ந்தெடுத்து மண்வளம், மழையளவுக்கேற்ப என்னென்ன பயிர்களை விளைவிக்கலாம் என்பதை நிர்ணயித்து, விவசாயிகளிடம் கலந்து பேசி, ஆரம்பக் கட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

**மகளிர் திருமண நிதி உதவித் திட்டம்**

மகளிர் திருமண நிதி உதவித் திட்டம் பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே நிலுவையில் உள்ள மனுக்களிலும் பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கே நிதி உதவி வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. பழங்குடியினரைப் பொறுத்த

வரையில் அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தாலே போதும் என்ற விதியை அப்படியே நீடிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

**மகளிருக்கான சிறுவணிகக் கடன் திட்டம்**

மகளிருக்கு, சிறுதொழில் செய்ய கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சி மற்றும் கிராமப்புற பகுதிகளிலும் மகளிருக்கான சிறுகடன் உதவி வழங்கும் திட்டம் தற்போது மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக நகராட்சி பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் முனைப்புடன் செயல்பட்டு அதிக அளவிலான பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து மே மாதம் 2ஆம் நாள் நகராட்சிப் பகுதிகளில் இத்திட்டத்தை நன்கு விளம்பரப்படுத்தி ஆரம்பிக்க வேண்டுமென்றும், அடுத்தடுத்து உள்ள நகர்ப்பகுதிகளையும் சேர்த்து அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விழாவுக்கு ஏற்பாடு செய்து ஒரு நகராட்சிக்கு 100 மகளிர்களுக்குக் குறையாமல் கடனுதவி வழங்கவேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**மகளிர் நியாயவிலைக் கடைகள்**

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்களது மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் மகளிர் நியாயவிலைக் கடைகளை அமைக்கலாம் என தெரிவு செய்து, அவ்விடங்கள் நியாயவிலைக் கடைகள் அமைக்க ஏதுவாக உள்ளதா என்பதை பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

ஆரம்பக்கல்வித் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு முன்பு குடும்ப நல திட்டத்தை செயல்படுத்த சிவப்பு முக்கோண சின்னத்தை பயன்படுத்தியது போன்று, கல்வி இலாகா மூலம் எல்லா இடங்களிலும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும்படி பெற்றோருக்கு கோரிக்கை வைத்து ஒரே மாதிரியான விளம்பரத்தை ஒப்புதல் பெற்றுச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் நமக்கு நாமே திட்டம்**

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் பிற நல திட்டங்களை செயல்படுத்தி தொடங்கிவைக்கும்போது அமைச்சர்களை அழைத்து அந்த தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரையும், உள்ளாட்சித் தலைவர்களையும் அழைத்து விழா நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டங்கள்**

சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாடு திட்டத்திற்கு முறையே ரூ.50 இலட்சமும், ரூ.2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளருக்கும் பணிப் பட்டியல்களை அனுப்பி வைக்குமாறு சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கோரிக்கை விடுத்து செய்தித்தாள்கள் வழியாக ஒரு சிறு விளம்பரம் வெளியிடப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டியல்கள் வரப்படவில்லையெனில், இன்னின்னாரிடமிருந்து இன்னமும் பட்டியல்கள் பெறப்படவில்லை என்று குறிப்பிட்டு உடனடியாக பணிப் பட்டியல்களை அனுப்புமாறு கோரி இரண்டாவது விளம்பரத்தை வெளியிட வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

வரும் மே மாதம்1–ஆம் தேதியன்று எல்லா கிராமங்களிலும், கிராம சபை சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**சிறுசேமிப்பு**

மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் சிறுசேமிப்பின் முக்கியத்துவத்தைக் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சிறுசேமிப்பு வசூலை அதிகரிப்பதில் இந்த மாதம் முதலே கவனம் செலுத்தி நிர்ணயம் செய்த இலக்கினை தவறாமல் அடையவேண்டும்.

★ ★ ★

பிறப்பில் தீண்டாமை வருவது கொடுமை; வன்கண்; அநாகரீகம்.

- தமிழ்த்தென்றல் திரு.வி.க.

என்று நான் ஹரிஜன குடிசையில் போய் தங்கவும் அவர்கள் தரும் உணவை உண்ணவும் செய்கிறனோ அன்றுதான் எனக்கு நன்னாள்.

- மகாத்மாகாந்தி

# பொதுப்பணித் துறையின் போற்றத்தக்கப் பணிகள்

*– பொதுப்பணித்துறை அமைச்சர்*
திரு. துரைமுருகன்

தூர்வாருவதிலே இது வரையிலே நல்ல பெயரை நாங்கள் பெற்று இருக்கிறோம். மக்களும் நீங்களும் வாழ்த்தி இருக்கிறீர்கள். ஆனால், இவற்றையெல்லாம் விட 21-வது நூற்றாண்டிலே மில்லியன் பிராஜெக்ட் என்று சொல்லக்கூடிய அளவுக்குச் சென்னை மாநகரத்தை சிங்காரச் சென்னையாக மாற்றித் தீருவது என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் ஒரு முடிவு எடுத்து விட்டால் அதைச் செய்வார்கள் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை.

பக்கிங்காம் கனாலை தூர்வாரி சீரமைப்பதற்கு 24 கோடி ரூபாய். கூவம் நதியை தூர்வாரி சீரமைக்க 32 கோடி ரூபாய், சி.எம்.டி.ஏ. மற்ற இடங்களிலே தணிகாசல நகர், அம்பத்தூர் போன்ற இடங்களிலே பணிகளைச் செய்ய 26 கோடி ரூபாய் இவைகளை ஒதுக்கிவிட்டு, இன்றைக்கு டெண்டர்விட்டு, டெண்டர் முடிகிற நிலையிலே வந்து இருக்கிறது.

**சிங்காரச் சென்னை**

இது ஒரு மகத்தான திட்டம், இது ஒரு தனி மனிதனால் சாதிக்கக் கூடியதல்ல. அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டும். அந்தத் திட்டத்தினை நிறைவேற்றுகிற பொறுப்பை, மாநகராட்சி யிடத்திலேயும், எங்களிடத்திலேயும் கலைஞர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். இத்திட்டத்தினைக் கொடுத்து, எப்போது முடிப்பாய் என்று என்னை கலைஞர் கேட்டார்கள். நான் அவரிடத்திலே சொன்னேன், 2001 செப்டம்பரிலே அண்ணா பிறந்த நாளிலே, படகு ஓடுகிற அளவுக்கு மாற்றியமைக்கப்படும் என்று நான் தெரிவித் திருக்கிறேன். அவரிடம், என்னை நம்பியல்ல, என்னை நம்பி மட்டுமல்ல, மற்ற எதிர்க்கட்சிகளும், பொதுமக்களும், மற்றவர்களும் மற்றும் அரசாங்கத்தை நம்பித்தான் இந்த உறுதிமொழியை கலைஞரிடத்திலே கொடுத்திருக்கிறேன். கட்சி வித்தியாசம் இல்லாமல் அத்தனை பேரும் இந்த மகத்தான திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று அனைவரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தொடர்ந்து சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன். கீழ்பவானி அணை 1953ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் மொத்த ஆயக்கட்டு 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கர். இந்த அணை கட்டப்பட்ட நேரத்தில் தண்ணீரை தாராபுரம் எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக கீழ்பவானி அணைக்கட்டு பகுதியில் [illegible] கிராமங்களில உளள பாசன நிலததில 12.5 சதவிகிதம் நிலங்களை கீழ்பவானி பாசன ஆயக்கட்டிலிருந்து நீக்கிவிட்டார்கள். இப்படி நீக்கப்பட்ட பகுதிகளை அந்த பகுதியில் 'தாராபுரம் கட்' என்று அழைப்பார்கள். அப்படி நீக்கப்பட்ட நிலங்கள் சுமார் 23,000 ஏக்கர்.



**கீழ்பவானி பாசன ஆயக்கட்டுகள்**

கீழ்பவானி பாசன ஆயக்கட்டில் உள்ள 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கரில் பாசன பரப்பில் உள்ள நிலங்களை வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றிவிட்டு இருக்கிறார்கள். தாராபுரம் கட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களை மீண்டும் கீழ்பவானி பாசனத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்து உள்ளார்கள். அவற்றை ஆராய்ந்த கலைஞர் அரசு அந்த 23,000 ஏக்கர்களையும் கீழ்பவானி பாசன ஆயக் கட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவு எடுத்து இருக்கிறது.

கீழ்பவானி பிரதானக் கால்வாயையும், தடப்பள்ளி அரக்கன்கோட்டை, காளிங்கராயன் ஆகிய கால்வாய்களையும் தூர்வாரி பலப்படுத்த ரூ.55 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை இந்த அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்காக இந்த ஆண்டு முதல் கட்டமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ.10 கோடி



வேலூர் மாவட்டத்தில் உள்ள மோர்தானா அணையில் இருந்து, வலது புற இடது புற கால்வாய்கள் மற்றும் கிளை வாய்க்கால்கள் உட்பட சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டி 17 ஏரிகளுக்கு நீர் வழங்கி சுமார் 10,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்காக, ரூ.40 கோடியை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதற்கான டெண்டர் விரைவில் விடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி கால்வாய்களை சீரமைப்பதன் மூலம் மிகையாக கிடைக்கும் நீரையும் ஏற்கெனவே பாசனப் பகுதியிலிருந்து வீடுகளாக மாற்றப்பட்ட ஆயக்கட்டு ஏக்கர் மூலம் மிச்சப்பட்டு இருக்கும் நீரையும் தாராபுரம் கட் பகுதியில் உள்ள நிலங்களுக்குத் தருவதன் மூலம் கீழ்பவானி பாசனதாரர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. அதனுடைய ஒரிஜினல் பாசனமான 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கருக்கு மேல் போகவும் போகாது.

'தாராபுரம் கட்' நிலங்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கின்ற விவசாயிகள் அதற்கு ஏற்படும் செலவை பொதுப்பணித்துறையின் நிபந்தனைக்கு உட்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### நந்தன் கால்வாய் திட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து மழைக் காலங்களில் உபரியாக கடலுக்குச் செல்லும் நீரை சமுத்திர ஏரிக்கு திருப்பி அங்கு மிகையாகும் நீரை துரிஞ்சலாறு மூலமாக நந்தன் கால்வாய் வழியாக தண்ணீர் அளிக்கும் திட்டம் மறைந்துவிட்ட ஏ. கோவிந்தசாமி, அவர்கள் கலைஞரிடத்திலே திருப்பி திருப்பி கேட்டுக் கொண்டிருந்த திட்டம். இந்த நந்தன் கால்வாய் திட்டம்.

இத்திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை, செஞ்சி, மேல்மலையனூர், முகையூர், விழுப்புரம் ஆகிய தொகுதிகளில் உள்ள 64 ஏரிகள் மூலம் சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெறும். இந்தத் திட்டத்திற்கு ரூ.27 கோடியை செலவிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இசைந்துள்ளார்கள்.

### பாலாற்றின் குறுக்கே அணைக்கட்டு

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சித்தாத்தூர் கிராமத்தின் அருகே பாலாற்றில் ஒரு அணைக்கட்டு அமைத்து, காவலூர், பில்லாந்திப்பட்டு, முடினாம்பட்டு, மேல்விலாச்சூர், கீழ்விலாச்சூர், வேலம்பட்டு, சோழமூர், திருமணி, ஒய்யாத்தூர், தலையாரம்பட்டு - உண்ணாமலை ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்க ரூ.3 கோடியை முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தாண்டு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 29 நீரேற்று இரவை பாசனத் திட்டங்கள்

தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டம், நாகை ஆகிய மாவட்டங்களில் 29 நீரேற்று இரவைப் பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் பழுதடைந்து நீண்டகாலமாக செப்பனிடபடாமலே இருக்கின்றன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதனை செப்பனிட்டுத் தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தாண்டு இந்த 29 நீரேற்று இரவைப் பாசனத் திட்டங்களையும் புதுப்பித்து பாசனத்திற்கு ஏற்ற வகையில் செய்து தருவதற்காக ரூ.66 இலட்சத்தை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### 'பெட்டேம்' கட்டப்படும்

தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் ஓடுகிற ஆறுகள், வாய்க்கால்கள் எல்லாம் நீர் ஓடுகிறபோது ஏற்படுகிற அரிப்பின் காரணமாக ஆற்றின் மட்டம் தாழ்ந்து போய் விடுகிறது. இதனால் மதகுகள் மட்டத்திற்கு தண்ணீர் ஏறி பாசனத்திற்கு செல்ல முடியாத நிலை உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட குறைகள் விவசாயிகள் மத்தியிலும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மத்தியிலும் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்த காரணத்தால் இத்தகைய நிலை உள்ள இடங்களில் பெட்டேம் கட்டுவதற்கு ரூ.3 கோடியே 71 இலட்சம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

### ஷட்டர்கள் புதுப்பிக்கப்படும்

திருவாரூர், நாகை, தஞ்சை மாவட்டங்களில் ஆறுகள், வாய்க்கால், வடிகால்களில் உள்ள ஷட்டர்கள் நீண்டகாலமாக புதுப்பிக்கப்படாததால் பழுதடைந்து இருக்கின்றன.

இதனால் வெள்ளக்காலங்களில் தண்ணீரை முறைப்படுத்த முடியவில்லை என்ற குறை தஞ்சை விவசாய மக்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று பழுதடைந்து இருக்கின்ற ஷட்டர்களையெல்லாம் புதுப்பிப்பதற்காக ரூ.4 கோடியே 36 இலட்சத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி யிருக்கிறார்கள்.

கும்பகோணம் நகரில் செல்லும் 4 கால்வாய்களைச் சீர்படுத்த ரூ.2 கோடியே 34 இலட்சம் செலவில் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. இதை மேலும் பலப்படுத்த ரூ.1 கோடியே 91 இலட்சம் ஒதுக்கப்படுவதற்கு கலைஞர் அவர்கள் இசைவு தந்திருக்கிறார்.

### உய்யங்கொண்டான் ஆறு தூர்வாரப்படும்

கடந்த ஆண்டு பெய்த பெருமழையில் திருச்சி மாநகரம் வெள்ளத்தில் மிதந்தது என்றே சொல்லலாம். காரணம் திருச்சி மாநகரத்தில் ஓடுகின்ற உய்யங்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு, ஆரியாறு ஆகிய நீர்வழிகள் நீண்ட நெடுங்காலமாக தூர் வாரப்படாமல் தூர்ந்து போனதே இதற்கு முக்கிய காரணமாகும். இந்தக் குறையைப் போக்கும் பொருட்டு இந்த ஆறுகள், கால்வாய்களையெல்லாம் தூர் வாரி கரைகளை அகலப்படுத்த நிதியினை முதலமைச்சர் ஒதுக்கியுள்ளார்.

தற்போது ஆறுகளில் எல்லாம் கருவேல மரங்களும், காட்டாமணிச் செடிகளும் மண்டிக் கிடப்பதால் ஆறே மறைக்கப்படுவதோடு ஆற்றின் போக்கும் திசை மாறுகிற நிலை உருவாகியிருக்கிறது. இந்த ஆபத்தை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக சென்ற நிதிநிலை ஆண்டில் ரூ.50 இலட்சத்தை ஒதுக்கி குளித்தலை பாலத்திற்கு மேல்புறமும், கீழ்புறமும் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்தச் செடிகளை அகற்ற உத்தரவிட்டு இருந்தார்கள். இந்தப் பணி செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் காவிரியில் மேற்படி வேலைகளைத் திருச்சி நகரம் முதல் கரூர் நகரம் வரை வரும் ஆண்டுகளில் தொடர்ந்து செய்யப்படும்.

நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையிலிருந்து மாசுபட்ட நீரை நேரடியாக புகலூர் கால்வாயில் கலக்காமல் காவிரி ஆற்றில் கலக்கச் செய்யும்படி ஒரு சைபன் அமைத்து நிரந்தர பரிகாரம் கண்டால் விவசாயிகளும், டி.என்.பி.எல். நிறுவனமும் மிக்க பயன்பெறும். இதற்காக 35 இலட்சம் ரூபாயை செலவிட கலைஞர் அவர்கள் இசைவளித்திருக்கிறார்கள்.



### பள்ளப்பட்டி குடிநீர் திட்டம்

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதியில் உள்ள ஊர் பள்ளப்பட்டி, இஸ்லாமிய பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி இது. நீண்ட காலமாக இந்த ஊரில் குடிநீர் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாகும். இதனைப் போக்கு வதற்காக நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

பள்ளப்பட்டிக்கு அருகில் உள்ள நங்காஞ்சியார் ஓடையில் ஓர் அணை உள்ளது. அது நீண்டகாலமாக பழுதடைந்திருக்கிறது. அதனைச் சீரமைத்தால், அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும், பள்ளப்பட்டி குடிமக்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று அந்த ஊரில் உள்ள பொதுமக்களிடமிருந்து அரசுக்கு பல விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ரூ.30 இலட்சத்தை நிதியாக ஒதுக்கி செலவிட முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் உள்ள கதிரியின் குளம் அதன் பாசனக் கால்வாய்களை தூர் வாரி பலப்படுத்துவதற்காக ரூ.50 இலட்சத்தை முதல்வர் அவர்கள் ஒதுக்கி யிருக்கிறார்கள்.

### சென்னம்பட்டி அணைக்கட்டு திட்டம்

இத்திட்டம் 1987ஆம் ஆண்டு துவக்கப்பட்டதாகும். ரூ.10 கோடி செலவு செய்து அணை கட்டி முடிக்கப்பட்டது. அணைக்கட்டின் இடது கரை, வலது கரை கால்வாய் 15 - 15 கிலோ மீட்டர் வெட்டி 21 குளங்கள் மூலம் 2,422 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுப்பது என்பது திட்டம். ஆனால் கால்வாய் ஆங்காங்கே பாதி வெட்டி இடையிடையே வெட்டப்படாததால் தண்ணீர் இருந்தும் கால்வாய்க்கு தண்ணீர் போகாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பெரியாறு பிரதான கால்வாயில் கடைசிப் பகுதியிலுள்ள மேலூர் பகுதியிலிருந்து மறவமங்கலம் ஏரி வரையில் 19 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கால்வாய் வெட்டப்பட்டு 41 கண்மாய்களுக்கு தண்ணீர் தந்து அதன் மூலம் 2,500 ஏக்கர் வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி செய்வது என்பது திட்டம். இதற்காக 1993ஆம் ஆண்டு ரூ.5 கோடியே 70 இலட்சம் ஒதுக்கப்பட்டு கால்வாய் வெட்டப்பட்டது. ஆனால் வேலை முடியவில்லை. இன்னும் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்ட வேண்டியிருப்பதாலும் சில கட்டுமானப் பணிகள் செய்யாததாலும் இந்தக் கால்வாய் பயனற்றதாக கிடக்கிறது. எனவே, இப்பணியை செய்து 2,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படுவதற்காக ரூ.1 கோடியை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி யிருக்கிறார்கள்.

குழித்துறை ஆற்றில் அமைந்ததுதான் விளாத்துறை நீர் ஏற்று இறைவைப் பாசனத் திட்டம். இதன் மூலம் 2,000 ஏக்கர் பாசனம் பெற்று வந்தது. ஆனால், இப்போது 1,800 ஏக்கர் பட்டணம் கால்பாசனத்தில் சேர்க்கப்பட்டு விட்டது. மீதி இருக்கிற 200 ஏக்கர் நிலத்திற்கு உடைந்து போனதால் தண்ணீர் போக முடியாத நிலை உருவாகியிருக்கிறது. அவற்றைச் சீர்செய்வதற்காக ரூ.5 இலட்சம் செலவு செய்ய முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டிருக்கிறார்கள்.

### 200 ஏரிகள் தூர்வார அனுமதி

அடுத்து, சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் ஏரியை முதலமைச்சரின் ஏரிகளின் தூர் வாரும் திட்டத்தின் கீழ், 1997-98ஆம் ஆண்டு 200 ஏரிகள் எடுக்கப்பட்டன. அதேபோல, 1998-99ஆம் ஆண்டு 200 ஏரிகள் தூர் வாரும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 1999-2000 ஆண்டிற்கும் 200 ஏரிகளை எடுத்து தூர் வாருவதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

### பொறியியல் சீர்திருத்தக் குழு

இறுதியாக, பொதுப்பணித்துறை ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட பழமையான துறையாகும். எனவே, இந்தத் துறையை மேம்படுத்த, பழமையான அதிகார உச்சவரம்பு மற்றும் நடைமுறைகள் தற்போதுள்ள காலத்திற்கு உகந்த வகையில் சீர்படுத்த வேண்டியது அவசியமாகும். குறைந்த தொழில் நுட்ப செலவீட்டில் நீடித்த நல்ல தரமான திட்டங்களை நிறுவுவதற்கும், அதனைப் பராமரிக்கவும் துறையைச் சீர்படுத்த வேண்டியதன் அவசர நிலையினைக் கருத்திற்கொண்டு, மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநரின் தலைமையில் ஒரு பொறியியல் சீர்திருத்தக் குழு நிறுவ முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தியா விலேயே பொறியாளர்களுடைய நிலைமையை அறிந்து, என்ன செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு பொறியியல் சீர்திருத்தக் குழுவை முதன்முதலாக அமைப்பவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவிற்கே இதுதான் வழிகாட்டியாக இருக்கும்.

*- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் சட்டப்பேரவையில் 7.6.99 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதங்களுக்குப் பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து...* □

# சாதனைபுரியும் சாலைப் போக்குவரத்து

*– சட்டப்பேரவையில்*

*போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி*

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், இது எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை அனைத்து உறுப்பினர்களுமே நன்கு எடுத்துக்காட்டி, உணர்ந்தும் இருக்கிறார்கள். 186 இலட்சம் மக்கள் தினந்தோறும் இந்தப் பேருந்துகளின் மூலம் பயணம் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 63 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் இந்தப் போக்குவரத்து பேருந்துகள் பயணிக்கின்றன.

***புதிய வழித்தடங்கள் பேருந்துகள் அதிகரிப்பு***

இந்த அரசு பொறுப்பேற்ற போது 15,857 பேருந்துகள்தான் இருந்தன. இப்போது 17,054 பேருந்துகளாக இந்த இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையின் மீது காட்டிய அக்கறையின் காரணமாக, பல்வேறு புதிய பேருந்துகள் மாற்றப்பட்டது மட்டுமின்றி, புதிய வழித்தடங்களாக 1,126 புதிய பேருந்துகள் பேருந்துத் துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு, புதிய வழித்தடங்கள் விடப்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம் இந்த இரண்டரை ஆண்டுகளில், இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இந்தத் துறையிலே நட்டம் ஏற்படும் என்றாலும் அதையும் பொருட்படுத்தாது, பொதுமக்களுக்குச் சேவை செய்யவேண்டும், கிராமப்புறத்து மக்களுக்கு பேருந்து வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்ற முதல்வர் கலைஞரின் எண்ணத்தை நடுநிலையாளர்கள் பாராட்டுகிறார்கள்.

சிக்கன நடவடிக்கை எடுத்தாலும்கூட, ஊழல்கள் தவிர்க்கப்பட்டாலும்கூட, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 350 கோடி ரூபாய் இழப்பு வரும் என்றும், ரொக்க இழப்பு 175 கோடி ரூபாய் வரும் என்றும் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதே ஏன் என்ற கேள்வி நியாயமாகத் தோன்றும் இந்தத் துறையின் மூலமாக இவ்வளவு நடவடிக்கை எடுத்தாலும்கூட, இந்த நட்டம் ஏற்படுவதற்கான காரணங்களை நான் இங்கே தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட போனஸ் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வந்ததை நீங்கள் அறிவீர்கள். புதிதாக இயக்கப்பட்ட வழித்தடங்கள் – இதுவரை எந்த ஆண்டும் 500–க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் இயக்கப்பட்டதில்லை. ஆனால், 1,126 வழித்தடங்களை இந்த இரண்டு ஆண்டுகளில் இயக்கியிருக்கிறோம். இந்த 1,126 வழித்தடங்களிலே கிட்டத்தட்ட ஆயிரம் வழித்தடங்கள் நட்டத்திலே இயக்கிய வழித்தடங்கள் தான். பல உறுப்பினர்கள் கேட்டார்கள், நட்டத்திலே இயக்குகிறீர்களே, தனியாரிடத்திலே விட்டுவிடக்கூடாதா என்று.

***மக்கள் வசதிக்காக நடைபெறும் துறை***

உறுப்பினர்கள் அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தப் பொதுத்துறையை முதல்வர் கலைஞர்

அவர்கள் தன்னுடைய செல்லப்பிள்ளையாக உருவாக்கியதன் காரணமே, இந்தத் துறையின் மூலமாக இலாபம் ஈட்ட வேண்டுமென்ற நோக்கத்தால் அல்ல. கிராமப்புறத்து ஏழை, எளிய மக்கள் போக்குவரத்து வசதிகளைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த தேசிய மயமாக்கும் கொள்கையை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதுமட்டுமன்றி, தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

சென்றமுறை பேசுகின்ற போது அரசு ஊழியர்களைப் போல தொழிலாளர்களுக்கும் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று தன்னுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள். இன்று அவர்களே பாராட்டுகின்ற அளவுக்கு தொழிலாளர்கள் கேட்ட கோரிக்கைகளை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், கலைஞர் அவர்கள் தொழிலாளர்கள் மீது கொண்டிருக்கின்ற அக்கறையை இன்று தொழிலாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

### தொழிலாளர்கள் மகிழும் ஊதிய உயர்வுகள்

அந்த உணர்வோடுதான் அவர்கள் எந்த அளவுக்கு வேகமாகப் போராடினார்களோ அவைகளை எல்லாம் இன்று நிறுத்தி வைத்துள்ளார்கள். அவர்கள் கேட்டதற்கு மேலாகவே ஊதிய உயர்வுகள் கொடுக்கப்பட்டன. கிட்டத்தட்ட 500 ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது. இதுவரையில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டாலுங்கூட, இதுவரையில் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தங்களில் எல்லாம் எந்த ஒரு ஆண்டும் சென்ற ஊதிய ஒப்பந்தத்தைவிட அடுத்த ஊதிய ஒப்பந்தத்தில் 300 ரூபாய்க்கு மேல் அதிகம் பெற்றது கிடையாது. ஆனால் இந்த ஊதிய ஒப்பந்தத்தில் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் 500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரை ஊதிய உயர்வு பெற்று அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதுதான் வெள்ளிடை மலை.

அதுமட்டுமல்ல, அவர்கள் முக்கியமாக வைத்த கோரிக்கை அரசு ஊழியர்களைப்போல் எங்களுக்கும் ஒய்வூதியத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது. அதையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதற்கான ஏற்பாட்டையும் செய்திருக்கிறது. அதேநேரத்தில் போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்குக் கொடுப்பதைப்போல் அதிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் விடுப்பு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு விருப்ப அடிப்படையில் அந்த விடுப்பையும் வழங்கியிருக்கிறது. அகவிலைப் படியை அதிகரித்து, அரசு ஊழியர்களைப் போல அதையும் அதிகரித்துக் கொடுத்திருக்கிறது.

### பணி மூப்பின் அடிப்படையில் ஊதியம்

இதுவரை ஏற்பட்ட ஒப்பந்தங்களிலே எல்லாம் சீனியர்கள், மூப்பு அடைந்தவர்களுக்கு எந்தவித பணிப்பயனும் கிடைக்கவில்லை என்று அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று முதல் முறையாக, இந்தப் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டதற்குப் பின், மூப்பின் அடிப்படையில் அவர்களுடைய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. 1998ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில்தான், கலைஞர் உருவாக்கிய அரசினுடைய ஒப்பந்தத்தில்தான் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலமாக மூத்த மூப்படைந்த பணியாளர்கள் அதிக ஊதிய உயர்வைப் பெற்றிருக்கிறார்கள்.

### கிராமப்புறங்களுக்கு சிறிய பேருந்துகள்

கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கும் வசதி செய்து கொடுக்கவும், அதே நேரத்தில் தேசிய உடமையாக்கப்பட்ட பேருந்துகளுக்கும் எந்தவிதமான சேதமும் வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் சிறிய பேருந்துத் திட்டத்தை அறிவித்தார்கள். இது 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளே இல்லாத வழித்தடங்களில், 4 கிலோ மீட்டருக்கு பேருந்துகள் இயங்குகின்ற தடத்திலே சென்று 16 கிலோ மீட்டருக்கு பேருந்து இல்லாத வழித்தடங்களிலே செல்லலாம் என்று சட்டத்தைப் பிறப்பித்தோம். இதன் அடிப்படையிலே கிட்டத்தட்ட 802 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு, இன்று 516 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தை விரிவாக்குகின்ற எண்ணத்தோடு இந்த அரசு, வேகமாக நடவடிக்கை எடுக்கின்றபோது, உயர்நீதி மன்றத்தினால் தடையாணை பிறப்பித்ததனுடைய விளைவாக, தொடர்ந்து அது செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உயர்நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, பல்வேறு கிராமங்களுக்கு இந்த சிறிய பேருந்துகளுடைய வசதிகள் விரிவாக்கித் தரப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மூலமாக பல்வேறு நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டரை ஆண்டுகளில் 6 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன. 13 பகுதி நேர அலுவலகங்கள் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையை கணினி மயம் ஆக்குவதற்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

கணினி மயம் ஆக்குவதிலே என்ன நன்மை என்று சொன்னால், ஒரு பேருந்து விபத்திற்குள்ளாகிறது என்று சொன்னால், அல்லது ஒரு சிறிய கார் விபத்திற் குள்ளாகிறது என்று சொன்னால், சென்னையிலிருக்கிற ஆர்.டி.ஓ. அலுவலகத்திலேயே, அந்தக் காரினுடைய முழு விவரங்களையும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்குச் சென்று, அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சென்று தான் அதைத் தேடவேண்டுமென்ற அவசியம் இல்லாமல், இங்கே ஒரு பட்டனை அழுத்தினால் அந்தக் கம்ப்யூட்டரிலே அந்தக் காரினுடைய எண், அதற்கு உரியவர்கள் போன்ற அனைத்தையும் கண்டு பிடிக்கக்கூடிய அளவிற்கு, இன்று இந்த கணினி மயம் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பல உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டு வந்த குறை, அங்கே இருக்கிற இடைத்தரகர்கள் அதிகாரிகளை அங்கே இருக்கிற மற்றவர்கள் யாரும் சந்திக்க முடிவதில்லை. டிரைவர் லைசென்ஸ் வேண்டுமா, கண்டக்டர் லைசென்ஸ் வேண்டுமா, நான் வாங்கித் தருகிறேன் என்று 500 ரூபாய், 1000 ரூபாய், 2000 ரூபாய் கூடப் பெற்றுக் கொண்டு, அதற்கு இடைத்தரகர்களாகப் பலபேர் செயல்பட்டு வந்த நிலைமை நீண்ட காலமாக இருந்து வந்தது. இதை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பெருமளவிற்கு வெற்றியைத் தந்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

அங்கே இடைத்தரகர்களே வரக்கூடாது என்று ஆணை பிறப்பித்தது மட்டுமின்றி, ஒவ்வொரு அலுவலகத்திலும் அனுமதி பெற்ற ஒரு சிலரை நியமித்து, ஒரு அலுவலகத்திற்கு இருவர் என்ற அடிப்படையிலே நியமித்து, அவர்கள் மூலம் விண்ணப்பத்தை விற்கலாம், ஒரு விண்ணப்பம் ஒரு ரூபாய் என்ற அடிப்படையிலே கொண்டு வந்ததன் மூலமாக இந்த இடைத் தரகர்களுடைய கொடுமை ஓரளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

### *மாநகரப் போக்குவரத்து கழகங்கள் இணைப்பு*

அதேபோல, சென்னை மாநகரத்திலே இயங்கி வந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களையும் ஒன்றாக இணைத்து அதுவும் மாநகரப் போக்குவரத்துக் கழகமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டினுடைய செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு படிப்படியாக மற்றப் போக்குவரத்துக் கழகங்களையும் இணைக்கின்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று இந்த அரசு முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்கள் நிதித்துறையிலே ஏற்பட்டு ஊழல்கள் ஒழிப்பு இவைகளை எல்லாம் இந்த அரசு முழுமனதோடு செய்து வருகின்ற காரணத்தால் இந்தத் துறையினுடைய



*சர்.பிட்டி தியாகராயர் அவர்களின் 148ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு 27-4-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தனர்.*

பல்வேறு பணிகள் ஓரளவிற்கு திருப்தியளிக்கக்கூடிய அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று நடுநிலையாளர்கள் பாராட்டுகிறார்கள்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் சில அறிவிப்புகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். பொதுமக்கள் வசதியைக் கருத்தில் கொண்டு சென்னை மாநகரத்தில் தொலைபேசி மூலம் முன் பதிவு செய்து கொள்ளலாம். எப்படி இரயில்வேக்களில் எல்லாம் தொலைபேசி மூலமாக முன்பதிவு செய்து கொள்கிற வாய்ப்புகள் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போல சென்னை மாநகரத்தில் விரைவுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து கொள்வதற்கு, தொலைபேசி மூலமாக செய்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் சென்னை மாநகரத்தில் மற்ற மாநிலங்களுக்குச் செல்ல கூடுதலான இடங்களில் முன்பதிவு செய்யும் வசதி செய்து கொடுக்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. கலைஞர் நகர், திருவான்மியூர், திருவொற்றியூர், ஆவடி ஆகிய 4 இடங்களிலேயும் புதியதாக வருகிற ஆண்டு முதல் முன்பதிவு செய்வதற்கான அலுவலகங்கள் திறக்கப்படும்.

மேலும் Audio Web மூலம் இப்போது வளர்ந்து இருக்கிற இந்த Internet போன்ற வசதிகளைப் பயன்படுத்தி Audio Web மூலமாக பயண விவரங்களைத் தெரிந்து கொள்ள முடியும். எந்த ஒரு பயணியும் 4997370 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டால் போக்குவரத்துக் கழகத்தினுடைய பயன், பேருந்துகளின் கால அட்டவணை நேரம், அதிலே இடவசதிகள் அனைத்தையும் இருபத்தி நான்கு மணி நேரமும் தெரிந்து கொள்ள வாய்ப்பு வசதிகள் இந்த Audio Web மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இதை இலவசமாக நமக்கு செய்துகொடுப்பது Information Exchange India Limited நமக்கு இதை செய்து கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே சென்னையிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களோ மற்றவர்களோ எந்த நேரத்திலே பேருந்துகள் கிளம்புகின்றன. அதிலே இடம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் 24 மணி நேரமும் உறுப்பினர்கள் மட்டும் அல்ல யாரும் தெரிந்து கொள்ளக்கூடிய அந்த வசதிகளையும் இந்தப் போக்குவரத்துத் துறை மூலமாக இந்த ஆண்டு முதல் செய்து கொடுக்கப்படும்.

மேலும் புகை வண்டி நிலையங்களில் உள்ளதைப் போல திரும்ப வரும் பயணச் சீட்டுகளையும் முன்பதிவு செய்வதற்கான வசதிகளை விரைவுப் பேருந்துகளில் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று மதுரை, நெல்லை, நாகர்கோவில், கோவை, பெங்களூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து சென்னைக்கு பயணம் செய்பவர்களும், சென்னையிலிருந்து அந்த நகரங்களுக்குப் பயணம் செய்பவர்களும் Return ticket திரும்ப வருவதற்குரிய பயணச்சீட்டையும் முன்பாகவே பதிவு செய்து கொள்வதற்கான வசதியும் இந்த ஆண்டு முதல் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### *மதுரையில் ஓட்டுநர் பயிற்சி பள்ளி*

அதைபோல, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் நடத்தும் மதுரை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு அரசு இந்த ஆண்டு அங்கீகாரத்தை வழங்கி இருக்கிறது. சொகுசுப் பேருந்துகள் 5 ரூபாய், 7 ரூபாய், 8.50 ரூபாய் என்ற கட்டணத்தில் 3 இடங்களிலே நிறுத்தக்கூடிய பேருந்துகளை இயக்கி கிட்டத்தட்ட 20 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த சொகுசுப் பேருந்துகளை மற்ற நகரங்களிலேயும் இயக்க வேண்டும் என்று இங்கே உறுப்பினர் கணேசன் ஒரு கோரிக்கை வைத்தார். அது மற்ற எல்லா நகரங்களிலும் விரிவாக்குகிற வாய்ப்புகள் இல்லை.

ஏனென்று கேட்டால் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் பொதுவுடமையாக்கப்பட்ட தேசியப் பேருந்துகள் மட்டுமே இயங்கி கொண்டிருக்கின்றன. தனியார் பேருந்துகளோடு போட்டி போட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், சேலம் போன்ற நகரங்களிலே விட்டால் அங்கே தனியார் பேருந்துகளும் நகரப் பேருந்துகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படித் தனியார் பேருந்துகள் இயங்குகின்றபோது நம்முடைய பேருந்துகளிலே மட்டும் 5 ரூபாய், 7 ரூபாய், 8.50 ரூபாய் என்று டிக்கட் வைத்தால் அதிலே வருவதை விட அவர்களுக்குத்தான் வசூல் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால் அங்கே இயக்க முடியாது.

### *மதுரை நகரில் சொகுசுப் பேருந்துகள்*

ஆனால், மதுரை மாநகரத்தில் அங்கே இருக்கிற நகரப் பேருந்துகளில் தனியார் பேருந்துகள் இல்லை. பொதுவுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் மட்டுமே இயங்குகிற காரணத்தினால் சென்னை மாநகரத்தைப் போல மதுரை மாநகரத்திலேயும் விரைவு நகர சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு இவ்வளவு சலுகைகளை இந்த ஊதிய ஒப்பந்தத்திலே கொடுத்திருந்தாலும் மற்றொரு தொழிலாளரது கோரிக்கையான அவருடைய விருப்ப ஓய்வு இதுவரை தொழிலாளர் ஒருவர் தானாக விரும்பி இந்தப் பணியிலேயிருந்து ஓய்வு பெற வேண்டும் என்று சொன்னால் ஒரு 5 ஆண்டுக்காலம் தொடர்ந்து அவருக்கு பணிக்காலம் இருக்கும் என்று சொன்னால் அந்த 5 ஆண்டுக் காலத்திற்கும் ஆண்டிற்கு 8,500 ரூபாய் என்ற அடிப்படையில் ஐந்தாண்டுகளுக்கு கணக்கிட்டு அந்த நிதி வழங்கப்படும். இது அதிகபட்சமாக 8 ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள், அந்த 8,500 ரூபாயை இந்த ஆண்டு முதல் 9,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### *சாலை நெரிசலைக் குறைக்க ஏற்பாடு*

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் சைதை கிட்டு அவர்கள் அந்தப் பகுதியிலே பேருந்து நிலையம் வேண்டுமென்று சொல்லி, நாடாளுமன்ற உறுப்பினர் பாலு அவர்களுடைய உதவித் தொகையோடு மிகச் சிறப்பான பேருந்து நிலையத்தை அங்கே உருவாக்கியிருக்கிறோம். அதுமாத்திரம் போதாது என்று அங்கே ஒரு டெப்போ போன்ற பேருந்து நிலையத்தைக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுத்தார்கள். ஏனென்றால், அங்கே சாலை நெருக்கடிகள், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிற இடங்கள் அண்ணாசலையில் கிண்டி, தாம்பரம், சைதாப்பேட்டை, பல்லாவரம் என்ற இந்த 4 இடங்களிலும் சரி செய்யப்பட்டுவிடும் என்று சொன்னால் பெரும்பாலும் இந்தச் சாலை நெரிசலே இருக்காது. அவற்றிலே, தாம்பரத்திலே ஓரளவு செய்யப்பட்டு விட்டது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், குரோம்பேட்டை சாலைகள் எல்லாம் அகலப்படுத்தப்பட்டு, அங்கே நகரப் பேருந்துகள் எல்லாம் பக்கத்திலே சென்று நிற்கிற அளவுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது. கிண்டியிலே பாலம் கட்டிய பிறகுதான் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும். சைதையிலே அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக இன்று அங்கே பேருந்து நிறுத்தம் உருவாக்கப்பட்டது. மட்டுமின்றி, வருகிற ஆண்டில் ஒரு கோடி ரூபாய் செலவில் அங்குள்ள குடிசைகள் எல்லாம் அகற்றப்பட்டு, அங்கே பேருந்து நிலையம் உருவாக்கப்படுவதை நாம் பார்க்க முடியும். அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

### *சிங்கார சென்னையும் கூடுதல் பேருந்துகளும்*

சென்னை மாநகரத்திலே, கூடுதல் பேருந்துகளை விடவேண்டுமென்று சென்னை மாநகரத்து உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அதுவும் குறிப்பாக, இதைச் சிங்காரச் சென்னையாக மாற்ற வேண்டுமென்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், பார்க்கிற போதெல்லாம் கேட்கிற கேள்வி, "நீங்கள் என்னதான் பேருந்துகள் விட்டாலும் நெரிசல் இருக்கிறதே? எப்படியும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுதான், கடந்த இரண்டரை ஆண்டுகளில் நெருக்கடி பேருந்துகளாக 100 பேருந்துகள் விடப்பட்டன. அந்த நெருக்கடி பேருந்துகள் 100–ம் போதாது என்ற சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல சார்ட்டட் டிரிப் என்ற அடிப்படையில், அலுவலகங்களில் – அரசு அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தப் பேருந்து நடைகள், அலுவலகங்களுக்குச் சென்று அவர்கள் எங்கே குடியிருக்கிறார்களோ அங்கேயே சென்று இறக்கிவிட்டு வருகிற ஒரு முறையை உருவாக்கினோம். அப்படி 12 பேருந்துகள் டி.எம்.எஸ். போன்ற இடங்களிலே இருந்து இயங்கி கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல; டாட்டா இன்ஸ்டிட்யூட் போன்றவைகளுக்கும் இதுபோன்ற பேருந்துகள் 20 பேருந்துகள்; ஆக 32 பேருந்துகள் சார்ட்டட் டிரிப் என்ற அடிப்படையிலே இயங்கி வருகின்றன.

அதிலே ஒன்றரை பங்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுபோன்ற வசதிகள் மேலும் விரிவாக்கப்பட, அரசு அலுவலகங்களிலே பணியாற்றுகிற மற்றும் பல்வேறு நிறுவனங்களிலே பணியாற்றுகிறவர்கள் அவர்கள் பணியாற்றுகின்ற இடத்திலிருந்து குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான அந்த சார்ட்டப் டிரிப்பை விரிவுபடுத்துவதற்காக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

**சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?**
**சமய, பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?**
**மாந்தரிற் சாதிவகுப்பது சரியா?**
**மக்கள் ஒரேகுலமாய் வாழ்வது சரியா?**

**– பாவேந்தர்**

### *100 பேருந்துகளுக்கு முதல்வர் நிதி ஒதுக்கீடு*

அதுமட்டுமல்ல; சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மேலும் கூடுதலாக 100 பேருந்துகளை இயக்குவதற்கு முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 11 கோடி ரூபாயையும் இந்தச் சென்னை மாநகரத்திற்காக வழங்கியிருக்கிறார்கள். அதிலே 32 தொடர் பேருந்துகள் இரண்டு பேருந்துகளாக இயங்குகிற அந்த 32 பேருந்துகளும், 38 விரைவுப் பேருந்துகளும், 30 சொகுசுப் பேருந்துகளுமாக 100 பேருந்துகள், கழகத் தலைவருடைய பவளவிழா நிறைவு நாளான ஜூன் 3–ஆம் தேதியிலிருந்து சென்னை மாநகரத்திலே இயக்கப்படும் என்பதையும், சென்னை மாநகர உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, சென்னைக்கு வருகிற அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

***– சட்டப் பேரவையில்***
***போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை***
***விவாதங்களுக்குப் பதிலளித்து***
***8.4.99 அன்று ஆற்றிய உரையிலிருந்து....***

★ ★ ★

# பெரியார் நினைவு சமத்துவபுரம்

## ஏனாத்தூர்

**கா**ஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அனைத்து இன மக்களும் ஒரே இடத்தில் கூடி வாழ்வதற்காக 100 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் அனைத்தும் இரட்டை வீடுகள் உள்ளதாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டின் பரப்பளவும் 605 சதுர அடியாகும். இந்த வீடுகள் அனைத்தும் சாதாரணமாக கட்டப்படும் தொகுப்பு வீடுகளைவிட உயரத்திலும், பரப்பளவிலும் அதிகம். இந்த வீடுகளில் ''பெர்ரோ சிமெண்ட்'' கூரைகள் வேயப்பட்டுள்ளன. வீட்டிலுள்ளே தொழிலாளர்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்காக பணிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மத்திய கிராமப்புறச் சுகாதார திட்டத்தின் கீழ் கழிப்பறை ஒன்றும், புகையில்லா அடுப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. பயனாளிகளிடம் ரூ.800 பெற்று ஒவ்வொரு வீட்டிற்கும் தமிழக மின் வாரியம் மின் இணைப்பு அமைத்துக் கொடுத்துள்ளது. வீட்டின் முன்புறம் மரங்களும், கீரை போன்ற பயன் தரும் செடிகளும் வளர்க்கப்பட்டுள்ளன.

**முகப்பு வாயில்**

பரந்த மனத்தோடும், விரிந்த உள்ளத்தோடும் வாழ்கின்ற சாதிபேதமற்ற சமுதாயத்தைக் காண சமத்துவபுரத்தின் முகப்புத் தோரண வாயில் வரவேற்பு நல்கிறது. அந்த முகப்பு வாயில் சுமார் 20 அடி உயரமும், 7 மீட்டர் அகலமும் கொண்ட எழில்மிகு தோற்றத்துடன் அமைந்துள்ளது. இரு மருங்கிலும் குதிரையில் கம்பீரமாக அமர்ந்து இருக்க, வண்ண மயமாய் அழகிய கலசங்கள் படிப்படியாய் இறங்கி மதில் சுவரோடு கண்கவரக்கூடிய வகையில் இணைந்துள்ளது.

# இது சமத்துவபுரமல்ல

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏனாத்தூரில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 27—4—1999 அன்று திறந்துவைத்தார். அப்போது அவர் ஆற்றிய உரையிலிருந்து....

இங்கு வரும் வழியில் இந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட மிகப் பெரும் ஹூண்டாய் கார் தொழிற்சாலை, அதற்கடுத்து மிகப் பொலிவுற அமைந்து கொண்டிருக்கிற இந்த ஆட்சியில் அமைக்கப்பட்டு — உருவாகின்ற செய்ண்ட்





அழகிற்கு மேலும் மெருகூட்ட, வண்ண பூக்களோடு அழகிய பூந்தொட்டிகள் சிறிய வளைவாய் பரந்து விரிகின்றன. முகப்பு தோரண வாயிலின் மேற்பகுதி காஞ்சிபுரம் – பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற பெயருடன் அமையப் பெற்றுள்ளது. சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை யிலிருந்து ஏனாத்தூர், காஞ்சிபுரம் செல்லும் சாலை இணைப்பில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்ற இரு அலங்கார தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**சாலைகள்**

இக்குடியிருப்பில் ஒரு மையச் சாலையும் பதினொரு குறுக்குச் சாலைகளும் ஆக மொத்தம் பன்னிரெண்டு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மையச் சாலையின் நீளம் சுமார் 600 மீட்டரும் அகலம் 7 மீட்டரும் கொண்டதாகும். மற்ற சாலைகளின் நீளம் 1,080 மீட்டர், அகலம் 3¾ மீட்டர். பிரதான சாலை முழுமையாக சமன் செய்யப்பட்டு சீரான தார் சாலையாகவும், மற்ற சாலைகள் சமன் செய்யப்பட்டு சீரான கான்கிரிட் சாலைகளாக உருவாக்கப்பட்டுள்ளன.

பல்லவ நகரத்தின் பழம் பெருமையை, பண்டைய தமிழர்களின் கலையுணர்வை எடுத்துக்காட்டும் விதத்தில், மையச் சாலையின் இருமருங்கிலும் கண்கவர் கலைபண்பாட்டுடன் அமைந்த சிலைகள், அதற்கென பிரத்தியேகமாக மேடை அமைக்கப் பட்டு, அதில் அமைக்கப்பட்டுள்ளன.

பண்டைய காலத்தில் தமிழர்கள் உபயோகப் படுத்திய இசைக் கருவிகளின் பெயர்கள் தெருக் களுக்கு சூட்டப்பட்டுள்ளன. அழகான வீணையாய் வடிவமைக்கப் பட்டுள்ள பெயர் பலகைகள் ஒவ்வொரு வீதியின் முகப்பிலும் அமைக்கப்பட்டுள்ளன.

பன்னிரெண்டு சாலைகள் பெயர்கள் : 1. தேனிசை தெரு, 2. மகர யாழ் தெரு, 3. ஆழி சங்கு தெரு, 4. மதுர வீணை தெரு,

# சுற்றுலாத்தலம்

— முதலமைச்சர் **கலைஞர்** பெருமிதம்.

**கோபைன் கண்ணாடி தொழிற்சாலையையும் கண்டு வந்தேன்.**

இந்த இரண்டையும் கண்ட களிப்பு எனக்கு அதிகம் என்றாலும் கூட — அதையும் மிஞ்சுகின்ற மகிழ்ச்சி பெரியார் நினைவு சமத்துவபுரத்தைக் கண்டதிலே எனக்கு இருக்கின்றதென்றால், அந்த இரண்டும் பொருளாதாரத் துறையிலே தமிழகத்தை வாழவைக்கக்கூடியவைகள். இது பொருளாதாரத் துறையிலே மாத்திரமல்லாமல், சமுதாயத் துறையிலே ஒரு பெரும் புரட்சியை



5. ஆமந்திரிகை தெரு, 6. துந்துபி தெரு, 7. வேய்ங்குழல், 8. பைந்துடி தெரு, 9. பேரிகை தெரு, 10. பூங்குழல் தெரு, 11. கவி முரசு தெரு, 12. மணி மாடகம் தெரு ஆகும்.

**வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள்**

சமத்துவபுரத்தில், மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க அங்கு அமைக்கப்பட்டுள்ள 11 தெருக்களில் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது. ஆங்காங்கே போக்குவரத்திற்காக 15 சிறு பாலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சத்துணவுக் கூடம்**

அழகிய வண்ணத்துடன் கூடிய சத்துணவுக்கூடம் கட்டப்பட்டுள்ளது.

**நியாயவிலைக் கடை**

நியாயவிலைக் கடை ஒன்றும் இங்கு உண்டு.



**ஆரம்பப் பள்ளிக்கூடம்**

இந்த பகுதியில் ஆரம்பப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. அதற்கு கட்டடம் அமைக்கப் பட்டுள்ளது. அதன் முகப்பு மற்ற பள்ளிக் கட்டடங்களைப் போல் அல்லாமல் ஒரு கடிகாரத்துடன் அழகிய கொடியுடன் அமைந் துள்ளது.

**சமுதாயக் கூடம்**

சமுதாயக் கூடம் ஒன்று உள்ளது. 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒரு அழகிய புல்வெளி அமைக்கப்பட்டுள்ளது; மற்றும் பயன்தரும் தென்னை, மா போன்ற மரங்கள் நடப்பட்டுள்ளன.

உருவாக்கியிருக்கக்கூடிய இடம் — இந்த ஏனாத்தூர் சமத்துவபுரம்.

உள்ளே நுழைந்து பார்க்கும்போது அந்தக் காலத்திலே மாமல்லன் உருவாக்கிய மாமல்லபுரத்திற்குள் நுழைகிறோமா என்ற எண்ணம் சிற்பங்களைக் கண்டபோது ஏற்பட்டது. உள்ளே நுழைந்து அங்கேயுள்ள தடாகங்கள், நீருற்றுகள் இவைகளையெல்லாம் பார்க்கும்போது ஏறத்தாழ நம்முடைய கோல்டன் பீச் தங்கக் கடற்கரையிலே சந்தோஷம் நிர்மாணித்துள்ள அந்தச் சோலையைப் பார்ப்பதைப் போன்ற உணர்வு எனக்கேற்பட்டது.

இவைகளையெல்லாம்விட — தோற்றம் மாத்திரமல்ல — இந்த இல்லங்களிலே குடி அமருகின்ற மக்களுடைய உள்ளங்களில் உந்தி எழுந்துள்ள உணர்வு — அந்த உணர்வின் அடிப்படையிலேதான் இந்தச் சமத்துவபுரம் தொடர்ந்து தமிழகம் முழுதும் அமைந்திட வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு நான் பாடுபட்டு வருகிறேன்.

**வென்று காட்டுகிற வகையில் நின்று காட்டும் சமத்துவபுரம்**

தமிழகத்திலே திறந்து வைக்கப்பட்டுள்ள 19ஆவது சமத்துவபுரம் இது. 18 சமத்துவபுரங்களையும் வென்று காட்டுகின்ற வகையிலே நின்று காட்டுகின்ற சமத்துவபுரம் இந்தச் சமத்துவபுரம். பதினெட்டு சமத்துவபுரங்களை நிர்மாணித்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என் மீது வருத்தப்படகூடாது. நாளைய தினம் இன்னொரு மாவட்டத்தில் நான் திறந்து வைக்கின்ற சமத்துவபுரம், இறையன்பை வென்று காட்டுகின்ற சமத்துவபுரமாகக் கூட இருக்கலாம். ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு போட்டி மனப்பான்மை — பொறாமை மனப்பான்மை அல்ல — அது கூடாது — போட்டி மனப்பான்மை, செயல்புரிய வேண்டும். பணி புரியவேண்டும், மக்களுக்காக கடமையாற்ற வேண்டும் என்பதில் அதிகாரிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டால்தான் நாடு வளம் பெறும். முன்னேறும், முகிழ்க்கும். அந்த வகையிலே தான் நம்முடைய காஞ்சி மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் இறையன்பு அவர்கள் இந்தப் பணியினை அவ்வளவு கலைத் திறனோடு செய்திருக்கிறார்.

அதைப்போல இங்கே வாழ்கின்ற மக்களுக்கு வசதிகள், வாய்ப்புகள். இங்கே மாடுகள் கட்டுவதற்கு ஒரு அருமையான கூடம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 47 மாடுகள் அங்கே இருக்கின்றன. அந்த மாடுகளை இங்கே குடியிருக்கிறவர்கள் வாங்கிப் பயன் பெறுவதற்கு அவர்களுக்கெல்லாம் கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அதை, அந்த மாடுகள் மூலமாகப் பெறுகின்ற இலாபத்தைக் கொண்டு, அடைகின்ற உறுதிமொழியோடு அவைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

**தொலைக்காட்சி அறை**

*தொலைக்காட்சி அறை ஒன்று தேரின் வடிவத்தில் புதுமையான கலைவடிவு கொண்டு திகழ்கிறது. டிஷ் ஆண்டெனா அமைக்கப்பட்டு சாட்டிலைட் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும்.*

**தெரு விளக்கு**

*18 சோடியம் ஆவி விளக்குகள் மாவட்ட பன்முகப்படுத்தும் திட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது.*

**குளம்**

*மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் பொதுமக்கள் மற்றும் கால்நடைகளின் உபயோகத்திற்காக குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் கரைகள் உயர்த்தப்பட்டு தரைகளில் புல் வளர்க்கப்பட்டுள்ளது.*

**"பூந்தென்றல்" பூங்கா**

*பிணைமான் இனிதுண்ண*
*வேண்டிக்*
*கலைமாத்தன் கள்ளத்தின் ஒச்சும்*
*சுரமே*

*— என்ற சங்க கால பாடலுக்கு ஏற்ப, கற்பூங்காவிலிருந்து ஓடி வரும் நீரை இரு மான்கள் குடிப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவில் பறவைகள் விலங்குகள் வடிவமைக்கப்பட்டு குழந்தைகளின் ஆர்வத்தை தூண்டுவதாய் அமைக்கப் பட்டுள்ளது. விளையாட்டு மைதானத்தில் பாம்பின் வடிவில், மயிலின் வடிவில், யானையின் தும்பிக்கையில் சறுக்குமரம், மிக்கி மவுஸ் ஊஞ்சல், சீசா விளை யாட்டுகள் என விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு குன்று வடிவமைக்கப்பட்டு அதிலிருந்து அருவி வழிந்தோடும் தோற்றம் அழகுற அமைந்துள்ளது.*

*வாலி பால், டென்னி காய்ட் விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தாமரை, அல்லி நிறைந்த தடாகங்களில் வாத்து நீந்துவது போல் வடிவமைக்கப் பட்டுள்ளன.*

**போக்குவரத்துப் பயிற்சியிடம்**

*தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாகனங்கள் ஓட்டும் பயிற்சியிடம் எதுவும் இல்லை. எனவே சமத்துவபுரத்தில் வாகனங்கள் ஓட்டும் பயிற்சியிடம் அமைக்கப்பட்டுள்ளது. இது காஞ்சிபுரம் பேருந்து உரிமை யாளர்கள் சங்கத்தின் சார்பாக 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் 100%*



**எந்தச் சமத்துவபுரத்திலும் இல்லாத வசதிகள்**

எந்தச் சமத்துவபுரத்திலும் இல்லாத பல வசதிகள் இந்தச் சமத்துவபுரத்தில் உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றன. இதை ஒரு சுற்றுலாத் தலமாகக்கூட இந்த வட்டாரத்து மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வளவு அற்புதமாக இந்தச் சமத்துவபுரம் அமைந்திருக்கின்றது. ஏதோ நூலகம் — படிப்பகம் என்று சொன்னால் நான்கு சுவர், ஒரு கூடம், ஐந்தாறு பலகைகள், இரண்டு மூன்று நாற்காலிகள், புத்தகங்கள் அடுக்குகின்ற அலமாரி என்றுதான் நினைப்போம். ஆனால், அதைக்கூட சுவடியகம் என்கின்ற பெயரோடு எழிலார்ந்த முறையிலே இலக்கியச் சுவையோடு அதையும் இங்கு அமைத்திருக்கின்றார்.

**முத்து மகுடத்திலே வைரக்கல்**

இங்கே இடம் பெற்று வாழ்வதற்கு ஒப்புதல் அளித்து ஒன்றாக வாழ்கிறோம் என்று சம்மதம் தெரிவித்து உறுதியளித்து வாழ்கின்ற மக்கள் யார் யார் என்று பார்க்கவேண்டும்.

நான் இங்கே வருகின்ற நேரத்தில் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம் தோழர் ஜானகிராமன் என்னைப் பார்த்தார் — இன்றைக்கு என்னவோ அவர் கறுப்பு சட்டை போடாமல் வந்திருக்கிறார் — அவர் சொன்னார். முத்து மகுடத்திலே வைரக்கல் பதித்ததைப் போல இந்தச் சமத்துவபுரம் என்று சொன்னார். "அழைத்து வந்து காட்ட வேண்டியவர்களுக்கெல்லாம் காட்டய்யா" என்று நான் அவரிடத்திலே சொன்னேன். அவ்வளவு பெருமை இன்றைக்கு எனக்கு.

நான் தம்பி துரைமுருகனிடத்திலும், வீராசாமி யிடத்திலும் சொல்லிக்கொண்டு வந்தேன். எனக்கே ஒரு ஆசை — ஏதாவது ஒரு வீட்டை கொடுத்தால் கொஞ்ச நாட்கள் இதிலே தங்கலாம் என்று ஆசை ஏற்பட்டதென்று சொன்னேன்.

அப்படிப்பட்ட இந்த இடத்தில் இன்றைக்கு ஆதி திராவிடர்கள் நாற்பது பயனாளிகள் இங்கே இடம் பெற்றிருக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் — வன்னியகுலத்தைச் சேர்ந்தவர்கள் 14 பேர். நாயக்கர் 8 பேர், உடையார் 2 பேர், நாவிதர் ஒருவர் ஆக மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 25 பேர். அவர்களைத் தவிர, பிற்படுத்தப்பட்டவர்கள் என்று எடுத்துக் கொண்டால் கவர நாயுடு ஒருவர், அகமுடையார் 8 பேர், செங்குந்தர் 6 பேர், யாதவர் 1, வன்னியச் செட்டியார் 1, முஸ்லிம் லெப்பை 4, கத்ரி 1, பத்ம சாலியர் 1, பிள்ளைவாள் புலவர் 1, துளுவ வெள்ளாளர் 1 — ஆக பிற்படுத்தப்பட்டவர்கள் 25 பேர். முன்னேறிய

பங்களிப்பாக எடுத்து செய்யப் பட்டுள்ளது.

**சுற்றுச்சுவர்**

சமத்துவபுரத்திலுள்ள காலி இடங்களில் ஆக்ரமிப்புகள் ஏதும் நிகழாவண்ணம் தடுக்கவும் அந்த இடத்தை பாதுகாப்பதற்காகவும் தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

**கால்நடைக் கூடம்**

சமத்துவபுரத்தில் உள்ள பயனாளிகளில் தகுதியான 45 நபர்களுக்கு ரூ.12,000 வீதம் கலப்பின கறவை மாடுகள் வாங்குவதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனாளிகள் வாழ்க்கைத் தரம் உயரும். மாடுகள் அனைத்தும் ஒரே இடத்தில் கட்டுவதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உள்ளிருப்பு வசதி திட்டத்தின் கீழ் கால்நடைக் கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 60,000 லிட்டர் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது தவிர ஆங்காங்கே பொதுமக்களின் வசதிக்காக குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 'நமக்கு நாமே' திட்டம் மூலமாக கண்ணைக் கவரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**பேருந்து நிழற்குடை**

'நமக்கு நாமே' திட்டத்தின் மூலமாக Helankellers Lions Club ரூ.25,000 செலவில் அழகிய பேருந்து நிழற்குடை ஒன்று அமைத்துள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து சமத்துவபுரத்திற்கு பேருந்து ஒன்று இயக்க அனுமதிக்கப்பட்டிருப்பதால் இந்நிழற்குடை மிகவும் பேருதவியாக இருக்கும்.

**சுவடியகம்**

சுவடியகம் (நூலகம்) என்பது தமிழ் மண்ணுக்கே உரிய தடாகத்துடனும் இயற்கை பொருட்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டு சமத்துவபுரத்தின் சகல அம்சங்களையும் காணுகின்ற அமைப்பில் வடிவமைக்கப்பட்டது. மஞ்சள் புல்லால் அமைக்கப்பட்ட மேற்கூரை இயற்கையான குளிர்ச்சி தருவதாக உள்ளது. மேலும் பசுமையான பாகற்காய்கள் கூரையில் படர்ந்து மண்ணின் வாழ்க்கை முறையை உணர்த்துகிறது.

**டிரான்ஸ்பார்மர்**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு புதிய டிரான்ஸ்பார்மர் மற்றும் புதிய மின்கம்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

**கைப்பம்பு**

இரண்டு கைப்பம்புகள் பொது மக்களின் உபயோகத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது.

---

சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் பிராமணர் 5 பேர். ஜெயின் மதத்தைச் சேர்ந்த நயினார் 2 பேர், பலிஜா நாயுடு 2 பேர், பெரி செட்டி ஒருவர் — இப்படி பத்து பேர். மொத்தம் நூறு பேரில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், ஜைனர்கள் என்று மொத்தம் 100 பேர் வாழ்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் இடுகாடு, சுடுகாடு பொதுவாகத் தான். தனித்தனியாகக் கிடையாது. வெளியே உள்ள கிராமங்களில், நகரங்களில் தனித்தனி இடுகாடுகளும், சுடுகாடுகளும் இருப்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி இந்த நிலை கூடாது. இப்படித்தான் நாம் வாழவேண்டும் என்பதைக் காட்டுகின்ற வண்ணம் இந்தச் சமத்துவபுரம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இன்னும் பல திட்டங்களை மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசுதான் இந்த அரசு. குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கே இறையன்பு, மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பையேற்ற பிறகு கழக ஆட்சியின் இந்த மூன்றாண்டுக் காலத்தில் அவருடைய பொறுப்பு அமைந்த இந்தக் காலக் கட்டத்தில் என்னென்ன அருமையான காரியங்கள் எல்லாம் இங்கே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் நன்றாக அறிவேன். அவருடைய முயற்சியினால் செய்யப்பட்ட காரியங்கள் எல்லாம் ஒரு புத்தக வடிவிலே என்னிடம் தரப்பட்டிருக்கின்றது. எத்தனை ஏரி குளங்கள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. ஆறுகள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரத்தில் எந்த அளவிற்கு பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள குளங்கள் எல்லாம் எந்த அளவிற்கு அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன. முக்கியமான நெடுஞ்சாலையிலிருந்து காஞ்சிபுரம் செல்கின்ற ஏரிக்கரையில் எத்தனை ஒளிமயமான விளக்குகள் எரிகின்றன.

**நல்ல அதிகாரிகள்தான் நல்ல திட்டங்களை உருவாக்க முடியும்**

இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது — நான் உங்களுக்கு ஒரு செய்தியைச் சொல்வேன் — அது உங்களுக்கு கோபமாகக் கூட இருக்கும். இப்படிப் பட்டவரை ஒரு மாவட்டத்தில் மாத்திரம் வைத்திராமல், மாநிலத்திற்கே பயன்படுகின்ற அளவிற்கு, சென்னைக்கு அழைத்துக் கொள்வதாக இருக்கிறேன். நீங்கள் வேண்டாமென்று சொல்வது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் நாளைக்கு திடீரென்று செய்தி கேட்டு என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவு அழகிய சமத்துவபுரத்தைக் கட்டியதற்கு பரிசா இது என்று என்னை நீங்கள் கேட்கக் கூடாது. சென்னையிலே இதைக் காட்டிலும் இன்னும் பெரிய பணி — இளைய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரு பல்கலைப் பணி — அவருக்கு



**புல் பண்ணை**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள கலப்பின கறவை மாடுகளுக்குத் தேவையான தீவனம் சமத்துவபுரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் கால்நடை பராமரிப்புத்துறை காலியாக உள்ள இடங்களில் கோ.1, கோ.2, சூபாபுல், அகத்தி, சோளம் மற்றும் மக்காச் சோளம் போன்ற புல்வகைகளை வளர்த்துள்ளது. இதன் மூலம் கறவை மாடுகளுக்கு தரமான தீவனம் அங்கேயே கிடைக்கும். 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் இந்த சமத்துவபுரத்தில் பொதுமக்களின் பங்கு மிகவும் அதிகமாகும். வி.ஜி.பி. நிறுவனம் சமத்துவபுரத்தில் பிரதான சாலையில் இருமருங்கிலும் அழகிய வேலைப்பாடுடன் கூடிய சிலைகளை அமைத்துத் தந்துள்ளது. இது தவிர, சமுதாயக் கூடத்தை அழகுப் படுத்தும் பணிகளும், புல்தரைகளும், பயன்தரும் மரங்களும் இந்நிறுவனம் செய்துள்ளது. சமுதாய கூடத்திற்கு தேவையான பிளாஸ்டிக் நாற் காலிகள் 100 திரு.சூசைராஜ் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி அறையில் தொலைக் காட்சிப் பெட்டியை இந்தியன் வங்கியும், பள்ளிக் கூடத்திற்கு தேவையான பெஞ்சுகள் மற்றும் நாற்காலிகளை காஞ்சிபுரம் பாரத வங்கியும் அளித்துள்ளன.

**மரங்கள்**

சமத்துவபுரத்தில் சுற்றுச் சுவரை சுற்றி நன்கு வளர்ந்துள்ள மரங்கள் நடப்பட்டுள்ளன. இது தவிர சுற்றுச் சுவர் உள்ள வேலியில் வண்ண மயமான காகிதப் பூச்செடிகள் படர விடப்பட்டுள்ளன.

**லே-அவுட் பலகை**

சமத்துவபுரத்தின் அனைத்து அம்சங்களையும் விளக்கும், லே—அவுட் பலகை ரோட்டரி சங்கத் தினால் அமைக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அரிமா சங்கத்தினர் தொம்பை, கடிகாரம் போன்ற பொருட்களால் சமத்துவபுரத்தை அழகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். ★

அளிக்கப்படவிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் இவரை விட்டால் என்ன செய்வது என்று நீங்கள் எண்ணக்கூடாது. இவரைப் போலவே இன்னொருவர் கட்டாயம் உங்களுக்குத் தரப்படும் என்ற அந்த உறுதியையும் நான் உங்களுக்கு வழங்குகிறேன்.

நல்ல அதிகாரிகள்தான் நல்ல திட்டங்களை நாட்டிலே உருவாக்க முடியும். அதற்கொரு முனைப்பு வேண்டும். அவரும் தன்னை அழகுபடுத்திக் கொள்ளாவிட்டாலும்கூட — இறையன்பு தலை சீவி நான் பார்த்ததே இல்லை — ஆனால் மாவட்டம் அழகாக இருக்கவேண்டுமென்பதற்காக, சாலைகள் அழகாக இருக்க வேண்டுமென்பதற்காக, அவர் பாடுபடுவதை நான் நன்றாக அறிவேன். அதிகாரிகள் தலை சீவிக் கொள்ள வேண்டாமென்று சொல்லவில்லை. தலையையும் சீவிக்கொள்ளுங்கள், அழகுபடுத்திக் கொள்ளுங்கள், நாட்டையும் அழகுபடுத்துங்கள், மக்களுடைய வசதி வாய்ப்புகளையும் அழகுபடுத்துங்கள்.

இந்த ஆட்சி காலத்திலே ஏழையெளிய மக்கள், சாதாரண சாமான்ய மக்கள், சிறுபான்மை சமுதாயத்து மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், எவ்வளவு பயன்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். நாம் கேட்பதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருக்கின்ற பொருளாதார வசதி நிதியாதாரத்தில் என்னென்ன திட்டங்களைத் தீட்ட முடியுமோ அந்தத் திட்டங்களையெல்லாம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். மேலும் அந்தத் திட்டங்களை தீட்டுவதற்காக நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட உங்களுக்காக அமைந்த இந்த ஆட்சியை உங்களுக்காகவே தொடர்ந்து பணிகளை ஆற்றக்கூடிய இந்த ஆட்சியை நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு — இந்த அரசின் சார்பாக மிக அற்புதமான ஒரு திட்டத்தை தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் — காலம் எல்லாம் சாதி ஒழிப்புக்காக, மத பேதங்களை அகற்றுவதற்காக, மதச்சார்பற்ற தன்மையை நிலைநாட்டுவதற்காக பாடுபட்ட எங்கள் ஆசான் — என்னை ஆளாக்கிய தந்தை பெரியார் பெயரால் — என்னுடைய அருமை அண்ணன், என்னுடைய இனிய தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இந்த பூமியில் — இந்த மண்ணில் — இந்த அற்புதமான திட்டத்தை நிறைவேற்றி திறந்துவைப்பதிலே பெருமை கொண்டு என்றென்றும் நான் உங்களுக்காக உழைப்பதற்கு தயாராக இருப்பவன் என்ற உறுதியை ஆயிரம் முறை உங்களுக்குத் தந்து விடைபெறுகிறேன். ★

# பால் உற்பத்தி பெருக்குவோம்

- பால்வளத்துறை அமைச்சர்
திரு.க.சுந்தரம்



**1958**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பால்வளத்துறை முதலில் 1970 வரை சென்னை மற்றும் மதுரை மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் மட்டுமே செயல்பட்டு வந்த நிலையினை மாற்றி 1972ஆம் ஆண்டு நமது முதல்வர் **கலைஞர்** அவர்களின் சீரிய சிந்தனையால் 'தமிழ்நாடு பால்வள நிறுவனம்' என்ற பொது நிறுவனமாக்கப் பட்டது. தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு பயன்தரும் வண்ணம் செயல்படும் இந்நிறுவனத்திற்கு 'ஆவின்' என்ற சிறப்புமிக்க பெயர் முதல்வர் அவர்களால் சூட்டப்பட்டது.



**நேர்மை-தூய்மையாக செயல்பட்டு வருகிறது**

இந்தத் துறையின் தலையாயக் குறிக்கோளான, தமிழ்நாட்டில் வாழும் பால் உற்பத்தியாளர்களாகிய கிராமங்களில் வாழும் ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு கட்டுப்படியாகும் நியாயமான விலை கிடைத்திடவும், அதே போன்று நுகர்வோருக்கு சீரான முறையில் சுகாதாரமான, தரமான பால் மற்றும் பால் உபபொருட்கள் நியாயமான விலையில் கிடைத்திடவும், கலைஞர் அவர்களின் வழி காட்டுதலின்படி இத்துறை நேர்மையாகவும், தூய்மையாகவும் செயல்பட்டு வருகின்றது.

**மானியம் வழங்க முதல்வர் உத்திரவு**

பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கிய போது, நுகர்வோர் நலன் கருதி பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் என உயர்த்தாமல், 1 ரூபாய் மட்டுமே உயர்த்தி, அதன் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடுகட்ட லிட்டர் ஒன்றுக்கு 50 காசுகள் மானியமாக வழங்க நமது முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதேபோல் பால் பவுடர், வெண்ணெய், நெய் போன்ற பால் பொருட்களின் உற்பத்தியும், விற்பனையும் கடந்த 5 ஆண்டுகளை ஒப்பு நோக்கினால் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த ஆண்டில் 4,384 டன் பால் பவுடர், 7,898 டன் வெண்ணெய், 3,392 டன் நெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொருட்கள், மாதா மாதம், தேக்கமில்லாமல் அதற்கென அரசால் நியமனம் செய்யப்பட்ட "பால் பொருட்கள் விலை நிர்ணயக் குழு"வின் பரிந்துரையின்படி விற்கப்படுகிறது.

**பால் கேன் வழங்குதல்**

பால்வளத்துறை மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியுதவியின் கீழ் கடந்த நிதியாண்டில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு 2700 பால் கேன்களும் 267 பால் தரமளக்கும் (மில்கோடெஸ்டர்) கருவிகளும் வாங்கித் தரப்பட்டுள்ளன.

இதே போன்று, தலா ஒரு இலட்சத்து 80 ஆயிரத்தி லிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 305 பால் சேகரிப்பு மையக்கட்டடங்கள், ஊரக வளர்ச்சி முகமை மூலமாக கட்டித் தரப் பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சம்பளம் மறு நிர்ணயம் செய்ய உத்தரவு**

கடந்த மானிய கோரிக்கையில் உறுப்பினர் சுப்பராயன் அவர்களது கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு 1980ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் 688 நபர்களுக்கு பணி அமர்வு செய்து வேலையில்லா காலத்தை, வேலையில் உள்ள காலமாக கருத்தில் கொண்டு சம்பளம் மறு நிர்ணயம் செய்ய உத்தரவிடப்பட்டது.

ஆவின் பால் பொருட்களான பாலாடைக்கட்டி, டெட்ரா பாக்கட்டுகளில் வழங்கப்படும் நறுமணமிக்க சுவையூட்டிய பால், மாம்பழச்சாறு (மாவின்), ஐஸ் கிரீம், சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), பால்கோவா ஆகியவை தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. ஆவின் நெய், குறிப்பாக வட மாநிலங்களான இராஜஸ்தான், டெல்லி, மத்தியபிரதேசம் போன்ற இடங்களில் பெரிதும் விரும்பப்படுகின்றன.

## பழச்சுவை சேர்க்கப்பட்ட புதுவகை தயிர்

பழச்சுவை சேர்க்கப்பட்ட புதுவகை சுவையூட்டிய (யோகர்ட்) தயிர், ஸ்ட்ராபெரி, பேரிச்சை, மாம்பழ மற்றும் வெண்ணிலா சுவைகளிலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இப்புதுவகை யோகர்ட்களுக்கு நட்சத்திர ஓட்டல்களில் நல்ல வரவேற்பு உள்ளது.

ஆவின் பால் பொருட்களின் சிப்பங்கள் புதுமையான கவர்ச்சிகரமாக, வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

## ஆவினுக்கு அதிக வாடிக்கையாளர்கள்

மாநகர மேயர் அவர்களின் 'சிங்காரச் சென்னை' திட்டத்திற்கு வலிமை சேர்க்கும் வண்ணம், மாநகரில் உள்ள ஆவின் பாலகங்கள் புதுப்பிக்கப்பட திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக பெருமை வாய்ந்த அடையார், அண்ணாநகர், அண்ணாசாலை பாலகங்களின் தோற்றம் மேம்படுத்தப்பட்டும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டும் அழகிய பெயர் பலகைகளுடனும் பன்னாட்டு நிறுவனங்களின் பாலகங்களுக்கு ஈடாக புதுப்பிக்கப்பட்டுள்ளன. அடையார் பாலகம்– டிரைவின் பாலகமாக மாற்றப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் ஆவினுக்கு அதிக வாடிக்கையாளர்களை ஈர்த்துள்ளன.

## விமானத்தில் ஆவின் யோகர்ட் வழங்கல்

கடந்த மானிய கோரிக்கையில் தெரிவித்தவாறு, ஆவின் யோகர்ட் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் வழங்கப்பட்டு வந்தது. விமானப் பயணிகளின் நல்ல வரவேற்பு காரணமாக வெளிநாட்டு வழித்தடங்களிலும் வழங்கப்பட்டது. வெளிநாட்டு விமான நிறுவனமான 'லுப்தான்சா' விமானங்களிலும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் உள்ள நட்சத்திர உணவு விடுதிகளிலும் 'ஆவின்' யோகர்ட் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் வெளிநாட்டில் இருந்துவரும் உல்லாச பயணிகளிடம் நல்லாதரவினை பெற்றுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு

நடப்பு 1999–2000 நிதியாண்டில் மாதவரம் பால் பண்ணை குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களை பழுது பார்க்கவும், குறுக்குச்சாலைகள் பராமரிக்கவும், 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அலுமினிய கேன்களும்; 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால் தரமளக்கும் கருவிகளும் ஊரகக் கூட்டமைப்பு நிதி வசதிகள் மூலம் செய்து தரப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மானியத்துடன் கறவை மாடுகள்

நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்



நலத்துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பால் உற்பத்தியாளர்களுக்கு 2 ஆயிரத்து 666 கறவை மாடுகள் 80 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வாங்கி தரப்படும். இந்நிதியாண்டில் 'தாட்கோ' மூலமாக 13 ஆயிரம் கறவை மாடுகள் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வாங்கி தரப்படும்.



மேலும் தாட்கோ நிதி உதவியுடன் இந்நிதியாண்டில் 2 ஆயிரம் கலப்பின கிடாரி கன்றுகளுக்கு நூறு சதவீத மானியமாக முப்பது மாதங்களுக்கு தீவனம் வழங்கி பராமரிக்க ஒரு கன்றுக்கு 10 ஆயிரத்து 680 ரூபாய் வீதம் 2 கோடியே 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கூறிய இரண்டு திட்டங்கள் மூலம் கறவை மாடுகள் வாங்க ஒரு கறவை மாட்டிற்கு 6 ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருந்த விலை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலப்பின கன்று வளர்ப்புத் திட்டம்**

மைய அரசு நிதியுதவியுடன், கலப்பின கன்று வளர்ப்புத் திட்டம், குறிப்பாக தென் மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களிடம், உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு சுமார் 5000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.730.34 இலட்சத்திற்கு (அரசு மானியம் ரூ.385.67 இலட்சம் வங்கிக் கடன் ரூ.344.67 இலட்சம்) கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3000 சிறு மற்றும் குறு விவசாயிகளும், 2000 விவசாயத் தொழிலாளர்களும் பயனடைவார்கள்.

**மானியமற்ற கறவை மாட்டுக் கடன்**

கடந்த நிதியாண்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், 2000 நபர்களுக்கு 4000 கறவை மாடுகள், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதியுதவியின் கீழ் மானியமற்ற கறவை மாட்டுக்கடன் கடந்த 98–99ம் ஆண்டில் வழங்கப்பட்டது.

அதேபோன்று, நடப்பு நிதியாண்டில் 2250 நபர்களுக்கு 4500 கறவை மாடுகள் வாங்கித்தரப்பட உள்ளன. இதற்காக 5 கோடி ரூபாய் நிதியுதவி தர பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இசைவளித்துள்ளது.

**250 நபர்களுக்கு தனி ஒதுக்கீடு**

சிறுபான்மை சமுதாய மக்களின் மீது என்றென்றும் தனி அன்பு கொண்ட நமது தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய மற்றும் கிறித்துவ பால் உற்பத்தியாளர்களில் 250 நபர்களுக்கு தனி ஒதுக்கீடு செய்து தரப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 100 சதவிகித மானியமாக வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் நிதியுடன் ஒன்றிய நிதியினைக் கொண்டும் கட்டப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இக் குளிரூட்டும் நிலையம் செயல்படத் தொடங்கும்.

**பால் குளிரூட்டும் நிலையம்**

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பாலை குளிர்விக்கும் திறன் கொண்ட ஒரு பால் குளிரூட்டும் நிலையம் 183 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்ட கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, தேசிய பால்வள வாரியத்தின் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய பால்வள வாரியத்தின் இசைவினை பெற்றவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 3 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலை குளிர்விக்கும் திறனுடன் கட்டுவதற்கு தக்க கருத்துரு தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் அவர்கள் சட்டப்பேரவையில் 19–4–1999 அன்று பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து...* ★

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழா 22.4.99 சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கில் நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவிற்கு தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் தலைமை தாங்கினார். இவ்விழாவில் கலந்துகொண்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:

"என் இனிய நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் ஏற்பட்ட நாற்பது ஆண்டு கால நட்பு — இன்றும் இதயத்தில் நிலைபெற்று பசுமையான நினைவுகளைத் தொடர்ந்து எழுப்பி வருவதுபோல், 31—8—1989 அன்று அவர் பெயரில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவிலும், 14—10—1990 அன்று நிகழ்ந்த இப்பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவிலும், அதன்பின் 21—3—1997 அன்று நிகழ்ந்த ஏழாவது பட்டமளிப்பு விழாவிலும் பங்கு கொண்டு உரையாற்றியும், பின்னர் 31—7—1998 அன்று நடைபெற்ற இப்பல்லைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்திடவும், இன்று ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவில் பங்குபெற்று உரையாற்றிடவும் கிடைத்த வாய்ப்புகளை எண்ணும்போது எம்.ஜி.ஆர். அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட நட்பினைப் போல், அவர் பெயர் தாங்கியுள்ள இப்பல்கலைக்கழகத்துடன் எனக்கு ஏற்பட்டு வரும் தொடர்புகளும் பெருகி வருவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

### 170 கல்வி நிறுவனங்களுடன் சிறப்பாக இயங்கும் பல்கலைக்கழகம்

தொடக்கத்தில் 35 கல்வி நிறுவனங்களை மட்டுமே கொண்டிருந்த இப்பல்கலைக்கழகம், இன்று பொது மருத்துவம், பல் மருத்துவம் உட்பட மருத்துவம் சார்ந்த 170 கல்வி நிறுவனங்களுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. இம்மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இதுவரை நிகழ்ந்த 8 பட்டமளிப்பு விழாக்களின் மூலம் 20,142 இளைஞர்கள் மருத்துவக் கல்வியின் பல்வேறு பிரிவுகளிலும் பட்டம் பெற்றுள்ளனர்.

இன்று நடைபெறும் இந்த ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவின் மூலம் 6,583 இளைஞர்கள் பல்வேறு வகை மருத்துவக் கல்வியிலும் பட்டம் பெறுகின்றனர் என்பது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். சிறகடிக்கும் இதயங்களுடன் இன்று பட்டம் பெற்றிடும் நீவிர், "எண்ணிய எண்ணியாங்கு எய்தி" வளமும் நலமும் பெற்று நும் வாழ்விலும், தொழிலிலும் வெற்றிகளை ஈட்டி — மருத்துவத் துறையில் சாதனை முத்திரைகளைப் பதித்து தமிழகத்திற்கு உலக அரங்கில் புகழ் குவித்திட வேண்டுமென உங்கள் அனைவரையும் உளமார வாழ்த்துகிறேன்.

### 3 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நாள்தோறும் சிகிச்சை

தமிழகம் முழுவதிலும் 300க்கும் அதிகமான அரசு மருத்துவமனைகள், 1420 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 20 மருந்தகங்கள், 48 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் நாள்தோறும் ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட வெளிநோயாளிகளுக்கு (Out-Patients) மருத்துவம் செய்யப்படுகிறது. 42,000 உள்நோயாளிகள் நாள்தோறும் அனைத்து மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

இதற்காக மொத்தம் 48,000 படுக்கை வசதிகள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு அரசு மருத்துவ மனைகளிலும் உள்ளன. பத்தாயிரத்திற்கும் அதிகமான மருத்துவர்கள் அரசின் சுகாதாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுச் சீரிய முறையில் தொண்டாற்றி வருகின்றனர்.

### மருத்துவ வசதிகள் பெருக ஆண்டுதோறும் ரூ.1,000 கோடி

அரசு ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் மருத்துவ வசதிகளைப் பெருக்கி வருகிறது. நகர்ப்புற மக்களுக்கு கிடைக்கும் மருத்துவ வசதிகள் அனைத்தும், கிராமப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நவீன

## உலக அரங்கில் மருத்துவத் தொழில்நுட்பத்தில் தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமைகள் கிட்டிட உழைத்திடுவீர்!

**- மருத்துவக் கல்வியில் பட்டம் பெற்றிடும் பைந்தமிழ் நாட்டுச் செல்வங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அழைப்பு.**

மருத்துவக் கருவிகளும், மருந்துகளும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் படிப்படியாய் வழங்கப்பட்டு வருகின்றன. முழுமையான மருத்துவ வசதிகள் அருகில் கிடைக்கப் பெறாத 250 வட்டாரங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்கி வருகின்றன.

உலக அளவில் முன்னேறிய நாடுகளில் 500 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற அளவிலும், இந்தியாவைப் பொறுத்தவரை 3,500 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற அளவிலும் இருக்கும் நிலையில் தமிழகத்திலே இன்று 2,500 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற அளவில் மருத்துவர்களை நாம் கொண்டுள்ளோம். மருத்துவ வசதிகள் தேவையான அளவிற்குக் கிடைக்கும் வகையில் மருத்துவர்கள் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்காக தமிழகத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கத் திட்டமிட்டு 1997—98ஆம் ஆண்டில் திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினோம்.

**தூத்துக்குடியில் அரசு மருத்துவக் கல்லூரி**

மத்திய அரசின் அனுமதி கிடைக்காமையால், தொடங்கப்படாமல் உள்ள தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டில் அனுமதி பெற்றுத் திறந்திட முடிவு செய்துள்ளோம். அடுத்த கல்வியாண்டில் வேலூரில் மேலும் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கிடவும் திட்டமிட்டுள்ளோம்.

சென்னை மருத்துவக் கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக நிலை உயர்த்தப்பட்டு உலகின் பல பகுதிகளிலிருந்தும் நவீன மருத்துவத் தொழில்நுட்ப உதவிகளை ஈர்ப்பதற்கு வழிவகுத்துள்ளோம். 1996ஆம் ஆண்டில் இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்ற பின் தமிழகத்தில் மருத்துவ வசதிகளை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1996—97ஆம் ஆண்டில் அரசு மருத்துவ மனைகளுக்கு 5 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரம் படுக்கைகளும், 6 ஆயிரம் கட்டில்களும் புதிதாக வாங்கப்பட்டன.

1996—97ஆம் ஆண்டில் 3.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் இல்லங்கள், நூலகங்கள், வகுப்பறைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.




மருத்துவக் கல்லூரி நூலகங்களுக்காக 1997—98ஆம் ஆண்டில் 40 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கல்வி தொடர்பான நூல்கள் வாங்கப்பட்டுள்ளன. திருச்சியில் புதிதாகக் கட்டப்பட்ட முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ஒரு கோடி ரூபாய் செலவில் மாணவ — மாணவியர் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 1998—99ஆம் ஆண்டில் இக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு 75 இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

**ரூ.43.36 கோடி செலவில் நவீன மருத்துவக் கருவிகள்**

தமிழகத்தில் மருத்துவக்கல்வியை மேலும் தரமாக வழங்கிட வேண்டும் என்பதற்காக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கடந்த மூன்றாண்டுகளில் 43.36 கோடி ரூபாய் செலவில் நவீன மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளை மேம்பாடு செய்திட 1997—98ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாயும், 1998—99ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாயும் வழங்கப்பட்டு பல்வேறு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்டடம் இல்லாத 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவில் கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 200 துணை சுகாதார மையங்கள் கட்டுவதற்காக 1997—98ஆம் ஆண்டில் 9 கோடி ரூபாயும், 1998—99ஆம் ஆண்டில் 7 கோடி ரூபாயும் வழங்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10 கோடி ரூபாய் செலவில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், அரசு மருத்துவமனைகளுக்கும் 280 ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சித்த மருத்துவத்துறையை மேம்படுத்துவதில் இந்த அரசு பல்வேறு பணிகளைத் தமிழகம் முழுவதிலும் மேற்கொண்டு வருகிறது.

**சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அரசு இலவச நிலம்**

மத்திய அரசு 100 கோடி ரூபாய் செலவில் அமைத்திடும் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு தாம்பரம் அருகே 6.64 கோடி ரூபாய் மதிப்புள்ள 14.78 ஏக்கர் நிலத்தினை தமிழக அரசு இலவசமாக வழங்கியுள்ளது. அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்ட இந்த மையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

இத்தகைய பணிகள் மட்டுமல்லாமல், கிராமப்புற மாணவர்கள் தொழிற்கல்விப் பிரிவுகள் அனைத்திலும் சேர்ந்து கற்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு 15 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது இந்த அரசு. அத்துடன் பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் மருத்துவக்கல்வி பயிலும் 10 முதல்நிலை மாணவர்களின் கல்விச்செலவு முழுவதையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஊக்கமளித்து வருவதும் இந்த அரசே.

இத்தகைய மருத்துவத்துறை வளர்ச்சிப் பணிகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து வருவதன் மூலம் தமிழக மக்கள் தரமான மருத்துவ வசதிகளைத் தடையின்றிப் பெறுவதற்குத் தேவையான வசதிகளை உருவாக்கி வருகிறது. இந்த அரசு என்பதனைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

> **தீண்டாமை நீதிச் சார்பில்லாதது,**
>
> **அறவழிக்கு மாறானது,**
>
> **சமய நெறிகளுக்குப் புறம்பானது.**
>
> **— குன்றக்குடி அடிகளார்**

மருத்துவக்கல்வி பயிலும் ஒரு மாணவனுக்கு அரசு ஏறத்தாழ 5.38 இலட்சம் ரூபாய் வரை செலவிடுகிறது. இப்பணம் முழுதும் ஏழை எளிய மக்கள் வழங்கும் வரிப்பணத்திலிருந்துதான் ஈடுகட்டப்படுகிறது. எனவே, வாழ்வில் வசந்தம் எதையும் காணாத ஏழை எளிய மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்பதனை நினைவுபடுத்திடவே இதனை ஈண்டு குறிப்பிடுகிறேன்.

**தமிழகத்தில் தரப்படும் தரமான மருத்துவ வசதிகள்**

இந்தியாவில் இதர மாநிலங்களை ஒப்பிடும்போது நமது தமிழகத்தில் தரமான மருத்துவ வசதிகள் மிகவும் அதிகரித்துள்ளன. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதிலும், முடநீக்கு இயலில் அறுவை சிகிச்சைகள் செய்வதிலும், குழந்தை இல்லாதோருக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதிலும் வெற்றி காணப்பட்டுள்ளது.

இருதய மாற்று அறுவை சிகிச்சையும், ஈரல் மாற்று அறுவை சிகிச்சையும் செய்வதற்கு ஆற்றல் படைத்த சிறந்த வல்லுநர்கள் நம் தமிழகத்தில் உள்ளனர். ஒரு காலத்தில் உயிர்காக்கும் மருத்துவ உதவிகளுக்காக தமிழகத்திலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்று வந்த நிலைமைகள் முற்றிலும் மாறி, இன்று எல்லாவிதமான மருத்துவ சிகிச்சை முறைகளிலும் நாம் பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

**பல்கலைக்கழக தொடக்க விழாவில் ஆற்றிய உரையின் பகுதி**

தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவில் 31—8—1989 அன்று நான் உரையாற்றிய போது,

"அமெரிக்காவில் பாஸ்டன் நகரம் மருத்துவ வசதிகளுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. அதே மாதிரியாக இன்று இந்தியாவில் சென்னை நகரமும் பெருமளவிற்குப் பெயர் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

பல ஆண்டுகளாகவே சென்னையில் பல்வேறு மருத்துவத் துறைகளில் தலைசிறந்த வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பரிசோதனைக்கும் மருத்துவத் திற்கும் பலவித நவீன வசதிகளும் பெருகியுள்ளன. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளிலிருந்தும்கூட சென்னைக்கு நோயாளிகள் மருத்துவம் செய்து கொள்வதற்காக வருகிறார்கள்.

தனியார் மருத்துவமனைகளில் இருக்கும் வல்லுநர்களிடமும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தொடர்பு கொண்டு அவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்திக் கொண்டு மருத்துவக் கல்வியை வளர்த்திட தமிழ்நாட்டில் வாய்ப்புள்ளது".

— என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்தி, இன்றைய நிலையில் சென்னை மாநகரம் பெற்றுள்ள நவீன மருத்துவ வசதிகள் மேலும் பெருகிடவும், தமிழக மருத்துவத்துறை வல்லுநர்களின் ஆற்றல்கள் மேலும் உயர்ந்திடவும், உலக அரங்கில் மருத்துவத் தொழில்நுட்பத்தில் சென்னை மாநகர்க்கு தமிழகத்திற்கு மேலும் பெருமைகள் கிட்டிடவும் உறுதிபூண்டு உழைத்திட வேண்டுமென இந்த மருத்துவப் பல்கலைக்கழகத்திடமும், இன்று பட்டம் பெற்றிடும் பைந்தமிழ் நாட்டுச் செல்வங்களாகிய உங்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

**மதவெறியை ஒழிக்க வால்டேர் எடுத்த முடிவு**

பிரெஞ்சு நாட்டின் புகழ் வாய்ந்த நடிகை ஏட்ரியன் லெக் ரூவியா என்பவர் நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையிலே கிடக்கிறார். அருகில் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவரான வால்டேர் நின்று கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தார். மதகுருக்கள் வந்தனர். தான் செய்த நடிகைத் தொழிலுக்காக வருந்தி மன்னிப்பு கேட்டாலன்றி மதச் சடங்குகளோ, கல்லறையில் இடமோ கொடுக்க முடியாது என்று பயமுறுத்தினர் என்றாலும் அந்த நடிகை, "என்னை ஆளாக்கி, பெரும் பணமும் சம்பாதித்துக் கொடுத்த அந்த கலைத் தொழிலுக்காக மன்னிப்புக் கேட்க முடியாது" என்று மறுத்து, இறந்தும் போய்விட்டார்.

உறவினர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடக்கம் செய்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது போலீஸ் புகுந்து தடியால் அடித்து எல்லோரையும் விரட்டி விட்டு பிணத்தை ஒரு குப்பை மேட்டில் போட்டு சுண்ணாம்புத் தண்ணீரைக் கொதிக்கக் கொதிக்க அந்தச் சடலத்தின் மேல் ஊற்றி — அது பஞ்சு பஞ்சாகப் போகும் அளவிற்குத் தடியால் அடித்துவிட்டுப் போய்விட்டனர்.

இதைக்கண்ட பிறகுதான் வால்டேர் இனி மதக்கொடுமைகளை ஒழித்தாலன்றி, சமுதாயம் தன்மானத்தோடு வாழ முடியாது என்ற முடிவிற்கு வந்தார். அதன்பின் அவர் தம்முடைய எழுத்தாற்றலைப் பயன்படுத்தி மதவெறி உணர்வுகளைக் கண்டிக்கத் தொடங்கினார்.

**வால்டேர் செய்த பணிகளை மேற்கொண்ட பெரியார் - அண்ணா**

வால்டேர் பிரெஞ்சு நாட்டில் செய்த பணிகளைத்தான் இந்த நூற்றாண்டில் நீதிக்கட்சியும் — திராவிட இயக்கமும் — தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்தில் மேற்கொண்டார்கள். இந்த நூற்றாண்டின் இடைப்பகுதிவரை சாதி மதங்களின் பெயரால் தீண்டாமைக் கொடுமைகள் தமிழகத்தில் மிக அதிகமாய் நிகழ்ந்தன. நாய்களும், பன்றிகளும் நடந்திடும் தெருக்களில் — மக்களில் ஒரு பிரிவினர் நடக்க முடியாத கொடுமை நிலவியது. உயர்சாதியினர் என்போர் எதிரில் வரும்போது தோளில் சட்டையும், துண்டும், காலில் செருப்பும் அணிந்து வந்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் தண்டிக்கப்பட்டனர். உயர்சாதியினர் நீரெடுக்கும் கிணற்றிலோ — குளத்திலோ சென்று தண்ணீர் எடுத்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆண்டவன்முன் அனைவரும் சமம் என்ற தத்துவமும் கேலிக்கூத்தாகி — அவர்கள் ஆலயத்திற்குள்ளும் அனுமதிக்கப்படவில்லை. ஆண்டான் அடிமை என்னும் பாகுபாடு நாடு முழுவதும் கோலோச்சியது.

> **மனித குலத்தில் சிலரைத் தீண்டமாட்டேன் என்பது பெரிய பாவம். நாயையும் பூனையையும் தீண்டுகிறவர்கள் உழைத்து ஓடாகி நிற்கும் சிலரைத் தீண்டமாட்டேன் என்பது மன்னிக்க முடியாத குற்றம்.**
>
> **— கிருபானந்தவாரியார்**

## பெரியார் - அண்ணா பாடுபட்டதால் அகன்ற சமுதாயக் கொடுமைகள்

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பாடுபட்டதன் விளைவாக இத்தகைய கொடுமைகள் இந்தச் சமுதாயத்தில் இருந்து படிப்படியாய் அகலத் தொடங்கின. நீதிக்கட்சி அரசிலும், அதன்பின்னர் 1971இல் தி.மு.க. அரசிலும், பின் எம்.ஜி.ஆர். அரசிலும், மீண்டும் 1989இல் தி.மு.க. அரசிலும் கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீடு சட்டங்கள் மூலம் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப் பட்டவர்களும் கல்வி வாய்ப்புகளையும் அரசு அலுவலகங்களில் வேலைவாய்ப்புகளையும் பெற்று பொருளாதார முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றனர்.

## இளைஞர் சமுதாயம் உணரவேண்டிய தியாகம் செறிந்த வரலாறு

இன்று பட்டம் பெறும் உங்களிலே கூட பலர் தமிழகத்தில் நடைமுறையில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீடு முறையில் மருத்துவக்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் என்பதனை சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலைமையை நாம் காணமுடியாது. இதுபோன்ற பட்டமளிப்பு விழா அரங்கிலே — பட்டம் பெற்றிருப்பவர்களில் சில குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே பெரும் பகுதியாக பங்கு பெற்றிருப்பார்கள்.

இன்று அத்தகைய சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. இந்த மாற்றம் — தியாகம் செறிந்த ஒரு வீர வரலாற்றைப் பின்னணியில் கொண்டுள்ளது என்பதனை இன்றைய இளைஞர் சமுதாயம் உணர்ந்திட வேண்டும். அந்தப் பின்னணிக்கு உரியவர்கள் யார்? எத்தகைய சூழ்நிலைகள் அப்போது நிலவின என்பதையும் உணர்ந்து தெளிந்திட வேண்டும். அப்பொழுதுதான் பெற்ற உரிமைகளைக் கட்டிக் காக்கும் உணர்வுகளை நீங்கள் பெற்றிட இயலும்.

உறுதியான கோட்பாடுகளும், கோட்பாடுகளை நிறைவேற்றிடும் உணர்வுகளும், இன்றைய இளைஞர்களுக்கு மிகவும் தேவை. குறுக்கு வழியில் சென்று ஊரை ஏமாற்றி, குறுகிய காலத்தில் கோடீஸ்வரர்களாக உயர்ந்திட வேண்டும் என்னும் தவறான எண்ணம் இன்று இளைஞர் சமுதாயத்தில் ஒரு சிலரிடையே தலைதூக்கி வருகிறது. வளரவேண்டிய — எதிர்காலச் சமுதாயத்தைக் காக்க வேண்டிய — பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் உரியவர்களாகத் திகழவேண்டிய இளைஞர்கள் சிலர் கொள்கைக் கோட்பாடுகள் எதுவும் இல்லாமல் — தவறாக வழிகாட்டப்படுவதால் இத்தகைய எண்ணத்திற்குப் பலியாகி வருகின்றனர். இப்போக்கு முற்றிலும் தடுக்கப்பட்டாக வேண்டும்.

## இளைஞர் தம் ஆற்றல் நாட்டிற்கு பயன்படவேண்டும்

மனித வாழ்வில் வளம் சேர்த்தற்குரிய இளமைப் பருவத்தின் ஆற்றல் வீணாகாமல் — நமது நாடு — நமது இனம் — நமது மொழி — நமது பண்பாடு யாவும் நன்னிலை எய்திடத்தக்க வகையில் இளைஞர்தம் ஆற்றல் முழுவதும் நாட்டிற்குப் பயன்படவேண்டும். சமுதாய நலன் நாடும் நல்லோர்தம் உள்ளங்கள் ஒன்றுபட்டு இதன்பொருட்டுப் பாடுபடவேண்டிய வேளை இது. இன்று பட்டம் பெற்றிடும் என் அருமைத் தமிழ்ச் சமுதாய இளைஞர்களே, உங்களுடைய மருத்துவத் தொண்டுகளுக்கிடையில் இளைஞர்களை வழிநடத்தும் இத்தகைய சமுதாய நலப்பணிகளிலும் உங்கள் எண்ணம் சென்றிட வேண்டும்.

இது இன்றைய பட்டமளிப்பு விழாவின் மூலம் — உங்களுக்கு மட்டுமல்ல — ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாய இளைஞர்கள் அனைவர்க்கும் நான் விடுக்கும் வேண்டுகோளாகும். இத்தகைய சிந்தனைகளுடன், இன்றைய சமுதாயத்தில் தன்னலச் சேற்றில் சிக்கிய சிலரால் வளர்க்கப்படும் சாதி மதக் கொடுமைகள் — சாதிப்பற்றுகள் அனைத்தையும் சாடிடுவீர்!

## ஏற்றத்தாழ்வற்ற நிலையை படைத்திடுவீர்

சமுதாயத்தில் சமத்துவத்தையும், பொருளா தாரத்தில் ஏற்றத்தாழ்வற்ற நிலையையும் படைத்திடுவீர்!

பகுத்தறிவுக் கதிரை எங்கணும் பரப்பிடுவீர்!

நாடு வீரர் கோட்டமாக — விவேகபுரியாக விளங்கிடவும், வளம் குலுங்கிடவும் தூய தொண்டுள்ளம் துணைவரப் பயணம் மேற்கொள்வீர். பயணத்தின் இடையில் இடர்கள் வரலாம்; எனினும்

**“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்”**

— என்னும் குறள்மொழியைத் துணையாய்க் கொண்டு உழைத்திடுவீர்! — வெற்றியும், புகழும் உமக்கே கிட்டுவது உறுதி எனக்கூறி — உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்ந்து விடைபெறுகிறேன்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கலைஞர்



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25-4-1999 அன்று காலை திருவள்ளூர் மாவட்டம் சந்தானவேணு கோபாலபுரத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தார். அன்று மாலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகம் மற்றும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய கட்டடங்களைத் திறந்துவைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப்பேருரை ஆற்றினார்.

இரவு 7 மணியளவில் மப்பேடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்து வைத்தார். இவ்விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., வரவேற்புரை யாற்றினார்.

இன்றைக்கு நாடெல்லாம் மதச்சார்பற்ற நிலை பற்றி பேசப்படுகிறது. மதவாதம் பற்றி பேசப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை நான் மதச்சார்பற்றவனா? அல்லது மதச்சார்பு உள்ளவனா? என்று கேட்டால் தனிப்பட்ட முறையில் கருணாநிதியைப் பொறுத்த வரையில் நான் மதச் சார்பற்றவனும் அல்ல! மதவாதியும் அல்ல! நான் மதமே அற்றவன்! எனக்கென எம்மதமும் கிடையாது. எம்மதமும் சம்மதமே என்கிற அந்தக் கொள்கையுடையவன் என திருவள்ளூர் மாவட்டத்தில் சந்தான வேணுகோபாலபுரம் - பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.

நிதிநிலை அறிக்கை கடந்த மார்ச் மாதம் 17ஆம் தேதி படிக்கப்பட்டது. இன்றைக்கு 38 நாட்களாகிறது. அறிக்கையைப் படித்த 38ஆவது நாளில் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படுகிறது. இதிலிருந்தே இந்த அரசினுடைய அறிவிப்புகள் வெறும் காகித அறிவிப்புகள் அல்ல, காரியமாற்றக்கூடிய அறிவிப்புகள், நடைபெறக்கூடிய அறிவிப்புகள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் திருவாரூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் ஆகிய புதிய மாவட்டங்களுக்கு இதைப்போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகங்களை அமைப்பதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 38 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை திருவள்ளூரிலே கட்டப்படவிருக்கின்ற கலெக்டர் அலுவலகத்திற்கு செலவிழிக்கப்படவிருக்கின்றது என்று முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் அடிக்கல் நாட்டு விழாவில் கூறினார்

சமத்துவபுரம் என்பது மதபேதங்கள், சாதிச் சண்டைகள் இவைகள் உருவாகாமல் நாம் அனைவரும் ஒரே குலம், மனித சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு இல்லை. அவர்களுடைய பண்பாடுகளைப் பொருத்து, குணநலன்களைப் பொருத்து, அவர்களுடைய சிறப்புக்களைப் பொருத்து, செயல்பாடுகளை பொருத்து உயர்வு தாழ்வு உண்டே தவிர, அவர்களுடைய பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு இல்லை என்கின்ற அந்தக் கருத்தை அந்தக் காலம் முதல் இந்த காலம் வரை சித்தர்களும், புத்தர்களும், இந்த நூற்றாண்டில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் அம்பேத்கரும் எடுத்துச்சொல்லி, அவ்வழியில் நடைபயிலுகின்ற இந்த அரசு இவைகளெல்லாம் வெறும் சொல்லளவில் இருந்தால் போதாது செயல் அளவிலே செயலாற்றப்பட வேண்டும் என்பதற்காக இந்த சமத்துவபுரம் திட்டத்தை வகுத்து கடந்த ஓராண்டு காலமாக தமிழகத்திலே நடைமுறைப்படுத்தி வருகிறது. இது பதினெட்டாவது சமத்துவபுரம். இன்னும் இரண்டு நாட்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏனாத்தூரில் 19ஆவது சமத்துவபுரத்தை நான் திறந்துவைக்க இருக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபாகர் முயற்சியால் ஆங்காங்கு பட்டா கொடுப்பதிலே கூட இந்த ஜாதி பேதங்கள் இருக்கக்கூடாது என்பதற்காக ஏற்கெனவே ஆதிதிராவிட மக்களுக்காக மாத்திரம் கொடுக்கப்பட்ட பட்டாக்கள் தருகின்ற பகுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பட்டாக்கள் தருவது, முன்னேறிய சாதியைச் சேர்ந்த மக்களுக்கும் பட்டாக்களைத் தருவது, நலிந்த மக்களுக்கும் இவர்களெல்லாம் ஒரே இடத்தில் குடியிருக்கக் கூடிய அந்த அற்புதமான சமத்துவ கொள்கையைக் கடைபிடிப்பது என்ற அளவில் சந்தான வேணுகோபால புரத்திற்கு பக்கத்திலேயே பட்டாக்கள் தரப்பட்டு அவர்களெல்லாம் ஒருமித்த கருத்துக்களோடு, அங்கே வாழுகின்ற காட்சியையும் நான் கண்டேன். இவைகளெல்லாம் எனக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைத் தருகின்ற செயல்களாகும் என்று மப்பேடு பெரியார் நினைவு சமத்துவபுர விழாவில் குறிப்பிட்டார்.



# பாவேந்தரின் சமுதாய நோக்கில் கலைஞரின் சமூகநேயச் செயலாக்கங்கள்



**- இரா. பரதன்,** எம்.ஏ.,

*"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று"*

– என்று நாடு சுதந்திரம் அடைவதற்கு 26 ஆண்டுகளுக்கு முன்பே இயற்கையெய்திய **மகாகவி பாரதியாரின்** விடுதலை வேட்கையும், தாய்மொழிப் பற்றும், சமத்துவச் சிந்தனைகளும், பாவேந்தரை முழுமையாக ஈர்த்ததினாலேயே, சுப்புரத்தினம் **பாரதிதாசனாக**, பாரதியின் 'தாசனாக'த் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

நாடு சுதந்திரமடைந்த பிறகு, மக்களாட்சி முறையை நாம் ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், 'நம்மை நாமே' ஆளுகின்ற உரிமையைப் பெற்ற பிறகு, புரையோடிக் கிடந்த நம் சமூகத்தில் களையப்பட வேண்டிய குறை பாடுகளைச் சுட்டிக்காட்டிய பாவேந்தரின் சிந்தனைகள், அவரைப் புரட்சிக் கவிஞராக்கியது என்றால் அது மிகையன்று.

பாவேந்தரின் தாய்மொழிப் பற்றும், சமூக சீர்திருத்தப் பார்வைகளும், பெண்ணுரிமைச் சிந்தனைகளும், தொழிலாளர் நலனில் அவர் காட்டிய பரிவுகளும் – தேன் தமிழ்க் கவிதைகளாக வெளிப்பட்டன. 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை **பெரியாரின் சிந்தனைகளை அடியொற்றி, பேரறிஞர் அண்ணாவின்** அரவணைப்பில், **பாவேந்தர் கனவுகளாக வெளிப்படுத்திய புரட்சிப் பாக்களுக்கு செயல்வடிவம் தரும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 'சமூக நேயச் செயலாக்கங்கள்'** நாளொரு வண்ணமாக நிறைவேற்றப்படுகின்றன என்றால் அது மிகையாகாது.

பெண்ணுரிமை பேணப்பட வேண்டுமென்பதில் புரட்சிகரக் கருத்துகளை கவிதைத் தென்றலாக வெளிப்படுத்தியவர்தான் **பாவேந்தர் பாரதிதாசனாவார்.**

*"கண்களும் ஒளியும் போலக்*
*கவின் மலர் வாசம் போலப்*
*பெண்களும் ஆண்கள் தாமும்*
*பெருந்தமிழ் நாடு தன்னில்*
*தன்கடல் நிகர்த்த அன்பால்*
*சமானத்தர் ஆனார் என்ற*
*பண்வந்து காதிற்பாயப்*
*பருகுநாள் எந்தநாளோ?*

– என்று பெண்களும் ஆண்களுக்கொத்த சமூக நிலையை எய்திடுவது எந்நாள்? என்ற ஆதங்கத்தைப் பாவேந்தர் வெளிப் படுத்துகிறார். **பாவேந்தரின் இந்தச் சமூகச் சிந்தனைக் கனவு, கலைஞர் அவர்களால் நனவாகி வருகிறது.** எவ்வாறெனில்,

காலங்காலமாகப் பழமையில் ஊறிப்போன ஒரு சமுதாய அமைப்பில், புரட்சிகர மாற்றங்கள் நிகழவேண்டுமெனில், முதலில் அது கல்வியைப் பரவலாகப் பெற்ற அறிவார்ந்த அமைப்பெனும் அடிப்படையை ஏற்றுக்கொண்டேயாக வேண்டு மென்பது ஒரு தவிர்க்க இயலா நிலையன்றோ? அதிலும் குறிப்பாகப் பெண்ணடிமைத்தனம் அகலவேண்டுமெனில், பெண் கல்வி கற்றேயாக வேண்டுமென்பது அடிப்படை அவசியமாகும்.

எனவேதான் தலைமுறைத் தேவைகளை முன்னிறுத்திச் சகாப்தம் படைக்கும் **கலைஞர்** அவர்கள், பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துப் பல்வேறு வழிகாட்டும் அரிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார்.

அதனடிப்படையில் தொடக்கக் கல்வியைக் கட்டாயக் கல்வியாக்கிடும் நோக்கில் **'தொடக்கக் கல்வி இயக்கம்' கலைஞர்** அரசால் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டிடும் வகையில், 1989–90இல் எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்களுக்கு **'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம்' கலைஞர்** அவர்களால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதில் ரூ.5,000 என்பது ரூ.10,000ஆக உயர்த்தி வழங்கப்படுகின்ற நிலையில், தற்பொழுது பெண்களின் படிப்பினை மேலும் ஊக்குவிக்கும் வகையில், பத்தாவது வரை படித்த 70,000 ஏழைப் பெண்கள் பயன்பெறும் வகையில் இவ்வாண்டிற்கு ரூ.70 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




மேலும் பெண்கல்வி ஊக்குவிப்பு என்ற அடிப்படையில், ஆதிதிராவிடர் வகுப்பினைச் சார்ந்த பெண்கள் அதிக அளவில் கல்வி கற்றிடும் வகையில், 5ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரைக் கல்வியைத் தொடர்ந்திட தொடர் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. சாதி, மதபேதமின்றி வர்க்க அடிப்படையில், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள அனைத்துப் பிரிவுப் பெண்களும், இலவசப் பட்டப்படிப்பினைத் தொடர்ந்திட ஏதுவாக, **'ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு இலவசப் பட்டப்படிப்புத் திட்டம்'** 1989இல் **கலைஞரால்** அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.12,000 வருமான வரம்பு என்பதை 1997லிருந்து ரூ.24,000ஆக அறிவித்து நடைமுறைப் படுத்தப்படுவதும் **கலைஞர்** ஆட்சியில்தான். அதேபோன்று பெண்கள் பட்டப்படிப்பு வாய்ப்பை அதிகரித்திடும் வகையில், அரசு ஆண்கள் கலைக் கல்லூரிகளில் பெண்களும் பட்டம் பயில ஆணையிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டவர், வருமான வரம்பிற்கு உட்பட்டு **பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த ஆண்கள்– பெண்கள் அனைவருக்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டமும்** அளித்தது **கலைஞர்** அரசுதான்.

பெண்கல்வி வாய்ப்பு அதிகரிக்கப்படுகிற அதேவேளையில், பெண்களுக்கு உரிய சமூக அந்தஸ்து கிட்ட வேண்டுமெனில், **பெண்கள் அனைத்து நிலைகளிலும் சுயச்சார்புடையவர்களாகப் பரிணமித்திட வேண்டுமென்ற அடிப்படையில், ரூ.12 கோடியில் இவ்வாண்டில்** தமிழகமெங்கும் 'மகளிர் மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. **மகளிர் சிறுவணிகக் கடன் வழங்கி வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பதும் கலைஞர்** அரசுதான்.

ஆண்களுக்கு நிகராகப் பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கும் சமஉரிமையுண்டு என்பதும், அரசுப் பணிகளில் **பெண்களுக்கு 30% ஒதுக்கீடு** என்பதும் சட்டப்பூர்வமாகியது **கலைஞரின்** ஆணைகளாலன்றோ? மட்டுமல்லாமல் **உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கென 33% ஒதுக்கீடு** செய்யப்பட்டு 2 பெண் மேயர்கள் உட்பட 44,143 பெண்கள் பதவிகளில் அமர்த்தப்பட்டிருப்பதும் **கலைஞர்** ஆட்சியிலேதான்.

***"கூண்டிற்கிளி வளர்ப்பார்***
***– இல்லத்தில்***
***குக்கல் வளர்த்திடுவார்,***
***வேண்டியது தருவார் –***
***அவற்றின்***
***விருப்பத்தையறிந்தே!***
***மாண்டவன் மாண்ட பின்னர் – அவனின்***
***மனைவியின் உளத்தை***
***ஆண்டையர் காண்பதில்லை – ஐயகோ,***
***அடிமைப் பெண் கதியே"***

– என்றும்,

***"பேடகன்ற அன்றிலைப் போல், மனைவி***
***செத்தால்***
***பெருங்கிழவன் காதல்செயப் பெண்***
***கேட்கின்றான்!***
***வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்***
***மணவாளன் இறந்தால், பின் மணத்தல்***
***தீதோ?"***

– என்றும்,

***"வருந்தாமற் கைம்பெண்முகம்
திருந்துமோ இச்சமூகம்?"***

– என்ற பாவேந்தரின் மனிதாபிமான வினாக்களுக்கு விடையாக,

'விதவையர் மறுமணத் திருமண நிதியுதவித் திட்ட'த்தை உருவாக்கி, விதவையர் மறுமணத்தைச் சட்டபூர்வமாக்கியது **கலைஞர்** அவர்கள்தான்.

அதோடு,

விதவையர் மகள் திருமணத்திற்கு நிதியுதவி, 'விதவைகள் உட்பட ஆதரவற்ற மகளிர்க்கு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்' மற்றும் 'ஏழை விதவைகளுக்கு மாதந்தோறும் ரூ.150 உதவிப்பணம் வழங்கும் திட்டம்' போன்றவை **கலைஞர்** ஆட்சியில் தான் அறிமுகப்படுத்தப்பட்டன என்பது மறுக்கவொணாச் சான்றுகளாகும்.

***"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்"***

– என்ற புரட்சிக் கவிஞரின் ஆதங்கக் கனவுகளைக் கலைஞரல்லவா நனவாக்கியுள்ளார்.

***"களைபோக்கிச் சிறுபயன் விளைக்க –
இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க்குரிய தென்பதையே!"***

– என்று உழைக்கும் வர்க்கத்தின் வியர்வைத் துளிகண்டு கசிந்துருகிய பாவேந்தர்

***"நித்தம் திருத்திய மேன்மையினால் மிகு
நெல்விளை நன்னிலமே! – உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!"***

– என்று விவசாயத் தொழிலாளி சிந்திய வியர்வைக்குரிய பலனுண்டா என்பதை,

***"மடுப்புனலும் செங்குருதிப்புனலும் வார்த்து
வளவயலில் களை எடுத்துக் காத்த செந்நெல்
அடுக்களையில் கண்டீரோ?***

– என்று அந்த விவசாயத் தொழிலாளரது ஏழ்மை நிலை கண்டு ஏக்கப் பெருமூச்சு விடும் பாவேந்தரின் பாடல் வரிகளுக்குப் பரிகாரமாக, 1970இல் 15 ஏக்கர் நில உச்ச வரம்பு எனும் புரட்சிகர உச்சவரம்புச் சட்டத்தை உண்மையிலேயே நிறைவேற்றி உழுது உழுது ஓடாய்த் தேய்ந்த நிலமற்ற விவசாயிகள் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 236 பேர்களுக்கு ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 700 ஏக்கர் நிலங்களை வழங்கி, 'நில உடைமையாளர்களாக' உயர்த்திப் பார்த்தது **கலைஞர்** இயற்றிய சட்டத் தினால் தானே!

விவசாயத் தொழிலாளர்களது இன்னல் களைந்திட, உழைப்புக் கேற்ற ஊதியம் என்ற அடிப் படையில் கோலப்பன் கமிட்டி அமைத்து விவசாயத் தொழிலாளர் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்திருப்பதும் **கலைஞர்** அரசுதான்.

மேலும் அகவை முதிர்ந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.150 உதவிப்பணமும், இலவச வேட்டி, சேலை வழங்கிவருவதும் **கலைஞரின்** நல்லாட்சியில் தானன்றோ?

***"ஏலாதுபடுக்கும் எண்சான் உடம்பை
நாலுசாண் அகன்ற ஓலைக்குடிசையில்
முழங்கால் மூட்டு முகம் வரச் சுருட்டி
வழங்கு தமிழரசு வளைந்த வில்லெனக்
கிடப்பவன் பகலெல்லாம் கடுக்க
உழைப்பவன்"***

– என்று ஒட்டைக் குடிசையில் வாழும் அனாதரவான உழைக்கும் வர்க்கத்திற்கு சொந்தக்குடில் தந்தது **கலைஞரின்** பேனா சிந்திய ஒரு துளி மையில் சட்டமாக இயற்றியதுதான், ''எங்கெங்கே விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்களோ, அந்த மனைகளையெல்லாம் அவர்களுக்கே உரிமையாக்கி, ஒரு இலட்சத்து 2 ஆயிரம் ஆதிதிராவிடர் உட்பட, ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு சொந்த மனைகளைத் தந்தது, கலைஞரின் புரட்சிகரச் சட்டம் தானே –

இது கிராமப்புற ஏழை விவசாயத் தொழிலாளிக்கு – அதேநேரத்தில் நகர்ப்புறத்தில் சாக்கடை மேட்டில், சாலையோரத்தில், கூவ நதிக் கரையில், குடிசைகளில் வாழ்ந்தோரை – அடுக்குமாடிக் குடியிருப்புகளை உருவாக்கி அவர்களைக் கோபுர உச்சியில் குடியமர்த்திட வகைசெய்யும் 'குடிசை மாற்று வாரியம்' எனும் திட்டம் கண்டதும் **கலைஞரின்** ஆட்சியில் தானே.

பல்கிப் பெருகி வரும் ஓலைக் குடிசைகளுக்கு 'தீப்பிடிக்காத கல்நார்க்கூரை'களை அமைத்திட ஆணை பிறப்பித்ததும் **கலைஞர்** தானன்றோ?



பாவேந்தர் பாரதிதாசன் 109ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலையிலுள்ள அவரது சிலைக்கு, 29–4–1999 அன்று மாண்புமிகு தமிழ் பண்பாடு மற்றும் தமிழ் ஆட்சிமொழி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் மாலைகள் அணிவித்தனர்.

*"பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல்*
*மடமை–இந்தப்*
*பிழை நீங்குவதே உயிருள்ளாரின் கடமை"*

*"வாழ்விற் செம்மை அடைதல் வேண்டும்*
*நாமே–நம்மில்*
*வஞ்சம் காட்டிச் சிலரைத் தாழ்த்தல் தீமை"*

*"சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?*
*சமய, பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?*
*மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?*
*மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?*
*சாதி, மத பேதங்கள் மூட வழக்கங்கள்*
*தாங்கி நடைபெற்று வரும்*
*சண்டையுலகிதனை*
*ஊதையில் துரும்புபோல் அலைக்கழிப்போம்;*
*பின்னர் ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம்*
*செய்வோம்!"*

– என்று நம் சமூக அமைப்பில் புரையோடிப் பரவிக்கிடக்கிற துவேஷ உணர்வுகளைக் களைந்திடல் வேண்டும்; ஏகபோகச் சமத்துவச் சமுதாயம் உருவாகிடல் வேண்டும் என்ற பாவேந்தரின் அவாவை, நிறைவு செய்வது **கலைஞரின் சிந்தையில் உதித்த "பெரியார் நினைவு சமத்துவபுர'**த் திட்டமல்லவா?

*"ஈழை அசுத்தம் – குப்பை*
*இலை எண்ணவே எங்கள் தலையிற்*
*சுமந்தோம்'*

– என்ற நிலையில், 'மனிதக்கழிவுகளைச் சுமக்கும்' அடித்தட்டு மக்களின் அவலங்கள் களைந்திட, அந்தச் சமூகக் கொடுமையை அடியோடு ஒழித்திட வழிவகை செய்தது **கலைஞர்** தானே.

இவ்வாறு பாவேந்தரின் கவிதைப் பார்வையில் புரட்சி கீதங்களாக வெளிப்படுத்தப்பட்ட **சமூக அவலங்களை அகற்றி, 'மனிதம்' தழைத்திடும் வகையில்,**

*"நமதடா இந்நாடு – என்றும்*
*நாமிந் நாட்டின் வேந்தர்*
*சமம் இந்நாட்டு மக்கள் – என்றே*
*தாக்கடா வெற்றி முரசை"*

– என்ற **புரட்சிக் கவிஞரின் கவிதைச் சிந்தாந்தங்களுக்குச்** செயலாக்கம் தருவது **கலைஞரின் இத்தகு சமூக** நேயச் செயலாக்கங்களன்றோ?

# பிற்படுத்தப்பட்டோர் நலன்

சட்டப்பேரவையில்
பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
**திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்**

**த**ந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பிறந்த மண் என்பதால் தமிழகம் இந்தியத் திருநாட்டில் என்றுமே ஒரு முக்கியத்துவம் உடையது. தமிழ்ச் சமுதாய மக்களின் தேவையை உணர்ந்து அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு உதவிட வேண்டுமென்ற எண்ணத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கென முதன்முதலில் ஒரு தனித்துறையை ஏற்படுத்தியது 1969-ஆம் ஆண்டு கழக அரசுதான். பெரும்பான்மை மக்களின் நலன் காத்திட 1971-72ல் பிற்படுத்தப்பட்ட துறைக்கென தனியாக மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்ததும். 1989-ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு என தனியாக ஒரு இயக்குநரகத்தை ஏற்படுத்தியதும், அதே ஆண்டில் தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு என தனியாக ஒரு துறையை உருவாக்கியதும் கலைஞர் அரசுதான். கலைஞர் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கீடு செய்து இந்தத் துறையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்.

### உணவுக் கட்டணத்தை உயர்த்தியது

விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ-மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1996இல் கழக அரசு பொறுப்பேற்றபோது ரூ.135 உணவுக் கட்டணமாக இருந்தது. அதை கலைஞர் அவர்கள் ரூ.180ஆக 1-6-98 முதல் உயர்த்தினார்கள். அதற்குப் பிறகு மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று ரூ.180-லிருந்து ரூ.225 ஆக உயர்த்தி வழங்குவது இந்த அரசுதான்.

அதேபோல கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு, கிராமப்புறங்களில் இருக்கும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் ரூ.193-ஐயும், சென்னைக்கு ரூ. 198 என்பதை ரூ. 300 ஆகவும் 1.6.98 முதல் ரூ. 300 என்பதை ரூ. 400 ஆகவும் உயர்த்தித் தந்துள்ளது கலைஞர் அரசுதான் என்பதை நான் இங்கே உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல சமையலர்களுடைய ஊதியம் 1.7.98 முதல் மாதம் ரூ. 500 தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய சமையலர்கள் ரூ. 2550 - 3200 என்ற முறையான ஊதியத்திலும், மாதம் ரூ. 100 தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய சமையலர்களின் உதவியாளர்களுக்கு ஊதியம் ரூ. 500 கழக ஆட்சியில்தான் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு எச்சரிக்கையாக சரியாக உணவு சமைக்காத சமையலர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதை கவனிக்காத காப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



150 வகையான திட்டங்களுக்கு நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு கைத்தறி மேம்பாட்டுக் கழகம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன் உதவிகள் வழங்க வேண்டுமென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் உறுப்பினர்கள் குறை கூறாவண்ணம் அந்த வங்கிகள் கண்டிப்பாகக் கடன் வழங்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல தொழில்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் கடன்களைப்

பொறுத்தவரையில் 33,021 நபர்களுக்கு ரூ.2,107.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய சங்கங்களின் மூலமாக 2,000 நபர்களுக்கு ரூ.456 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை கடன்கோரும் விண்ணப்பங்கள் ரூ.20க்கு விற்கப்பட்டு வந்தது. இனி விண்ணப்பக் கட்டணம் ஏதுமின்றி, விண்ணப்பங்களைப் பயனாளிகளே தயார் செய்து விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்படுவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. கடந்த காலங்களில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, இந்தப் பிரிவினருக்கு சமூகக் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தி பயனளித்துள்ளது. இட ஒதுக்கீட்டின் அளவு பெரும்பான்மையாக மக்களின் தேவைக்கேற்ப படிப்படியாகத் தொடர்ந்து வளர்ந்து, தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது.

தற்போது, தமிழ்நாட்டில் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கும், 18 விழுக்காடு ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 1 விழுக்காடு பழங்குடியினருக்கும் என 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மண்டல் குழு வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் காரணமாக, தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து செயல்படுத்துவதில், சில நடைமுறை சிக்கல் ஏற்பட்டன.

மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைப் பாதுகாத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு உறுதியுடன் உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தொகுதியில் விடுதிகள் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இங்கே இந்தத் துறையின் மூலமாக 967 மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால், சில இடங்களில் போதிய மாணவர்கள் தங்கிப் பயில வாய்ப்பு இல்லை. அதனால் தான் இந்த ஆண்டு முதல் புதிய விடுதிகள் தொடங்குவதற்கு அரசு அனுமதிக்கவில்லை. இருக்கின்ற விடுதிகளை முறையாக, சரியாக பராமரிக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, சீருடைகள், இந்தத் துறையின் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப் படுகின்றன. மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் சீர்மரபினர் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், பொங்கல் திருநாளில் ஒரு தொகுதியும், தீபாவளித் திருநாளில் ஒரு தொகுதியும் சீருடைகள் வழங்கப்பட்டு வந்தன.

## இலவச சீருடைகள்

1998-99 ஆம் ஆண்டு முதல் சீருடைகள் யாவும் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வழங்கப்பட வேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வியாண்டின் முதல் நாளே அதைக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதுவும் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் பயனடைந்த பயனாளிகளின் விவரம். பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 18,500 மாணவ, மாணவியர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களும், சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் 44,950 மாணவ, மாணவவியர்களும் பயன்பெறுகின்றனர்.

1999-2000 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ.133.4 இலட்சம் ஆகும்.

## இலவச பாடப்புத்தகம்

இலவச பாடப்புத்தகங்கள் : இதுவரை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியருக்கு, ஒன்பதாம் வகுப்பிற்கு சில குறிப்பிட்ட பாடப்புத்தகங்களும், பத்தாம் வகுப்பிற்கு அனைத்து பாடப்புத்தகங்களும் வழங்கப்பட்டு வந்தன. 1999-2000 ஆம் ஆண்டு முதல் பத்தாம் வகுப்பைப் போல,

ஒன்பதாம் வகுப்பு மாணவ, மாணவியர்க்கும் அனைத்துப் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவச கல்வித் திட்டம், அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு இட ஒதுக்கிட்டின் கீழ் அனுமதிக்கப்படும் மாணவ மாணவியருக்கும் பொருந்தும். 1999-2000ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.986.80 இலட்சமாக இருக்கும்.

**புதிதாக 100 வணிக வளாகங்கள்**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் கருதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 100 வணிக வளாகங்கள், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக ஏற்படுத்தப்படும். ஒரு வணிக வளாகத்திற்கு 10 கடைகள் என 1000 கடைகள், 1999-2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வணிக வளாகங்கள் நகரப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கென ரூ.5 கோடி செலவிடப்படும்.

***செவிலியர் உதவியாளர் பயிற்சி***

செவிலியர் உதவியாளர் பயிற்சி - (மகளிர் மட்டும்) பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு,

> **பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை - இந்தப்**
> **பிழை நீங்குவதே உயிருள்ளோரின் கடமை.**
>
> **- பாவேந்தர் பாரதிதாசன்**

சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் பயனடையும் வகையில் 1998-99 ஆம் ஆண்டில் 10-வது தேறிய மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த 15 மகளிருக்கும், பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 10 மகளிருக்கும், சென்னை அடையாறிலுள்ள தன்னார்வ மருத்துவ மையத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செவிலியர் உதவியாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், சென்ற ஆண்டு 25 நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த, இந்தப் பயிற்சி நடப்பு நிதியாண்டில் 250 நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ப்ளஸ் 2 வகுப்பு வரை இலவச கல்வி அளிக்கப்பட்டாலும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கென சமூகம் மற்றும் பொருளாதார சிக்கல்களினால் அவர்களது பெண் குழந்தைகள் ஆரம்ப கல்வி நிலையிலேயே பெறும் எண்ணிக்கையில் இடையிலே நின்று விடுகின்றன. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் நலன் கருதி 1 முதல் 6ஆம் வகுப்பு வரை அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் ஒரு சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

3 முதல் 5-ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.500 வீதம் 60,000 மாணவியர்களுக்கும், 6-ஆம் வகுப்பில் பயிலும் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு 30,000 மாணவ மாணவியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இலவச தொழிற்கருவி வழங்குதல்**

சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினரான சலவைத் தொழிலாளர்கள், முடித்திருத்துவோர், போயர்கள் ஆகியவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த கடந்த ஆண்டுகளில் வழங்கியது போன்றே இந்த ஆண்டும் 4,000 என்பதை 6,000 சலவைப்பெட்டிகளாகவும், 500 என்பதை 2,000 முடித்திருத்தும் கருவிகளாகவும், 1,000 என்பதை 2,000 கல்லுடைக்கும் கருவிகளாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்கான கூடுதல் செலவினம் ரூ.36.42 இலட்சம் ஆகும்.

**சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்**

வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்கேற்ப,

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருடைய வேலை வாய்ப்பும் உருவாக்கி கொடுக்கும் பொருட்டு தகவல், தொழில்நுட்பம் வரும் ஆண்டுகளிலே பெருமளவு வேலைவாய்ப்பு அளிக்கும் என்பதாலும் 5,000 நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல் படுத்தப் படுகின்றன என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

பள்ளி படிப்புத் திட்டத்தின் கீழ் 9-ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மாணவ, மாணவியர்களுக்கு இதுவரையில் வழங்கப்படாமல் இருந்த புத்தகங்கள் அனைத்தும் ரூ.64.48 இலட்சம் செலவில் வழங்கப்படும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு புதியதாக 5 கல்லூரி விடுதிகள் ரூ.22.16 இலட்சம் செலவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 15 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ.9 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

## ரூ.75 இலட்சத்தில் உணவு மானியங்கள்

பெரம்பலூர் மாவட்டம் பெரியார் குடில் எனும் தனியார் உணவு இல்லத்தில் கூடுதலாக 50 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் மாணவர்களுக்கும் இடம் அளிக்கும் வகையில் கூடுதலாக உணவு மானியங்கள் ரூ.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 10 கள்ளர் துவக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ரூ.56.50 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும். 20 கள்ளர் பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சம் செலவில் மின் இணைப்புகள் மற்றும் வசதிகள் செய்து தரப்படும். 20 கள்ளர் பள்ளிகளில் பெண்களுக்கு ரூ.10.65 இலட்சம் செலவில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். சென்னை சிறப்பு பயிற்சி நிலையத்திற்கு ரூ.21.17 இலட்சம் செலவில் வசதிகள் மேம்படுத்தி தரப்படும்.

சென்னை தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப மையத்தின் மூலம் 90 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பெண்களுக்கு தையல் எந்திரம் இயக்க பயிற்சி ரூ.6 இலட்சம் செலவில் அளிக்கப்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தவர்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

200 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பெண்களுக்கு ரூ.14.60 இலட்சம் செலவில் அலுவலக செயலர் பயிற்சி அளிக்கப்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தவர்களுக்கு ரூ.18.32 இலட்சம் செலவில் தோல் பொருட்கள் தயாரிப்பில் பணிசார்ந்த பயிற்சி அளிக்கப்படும்.

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தில் பங்கு மூலதனம் செலுத்த ரூ.100 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் திட்டங்களுக்கென ரூ.20 கோடி மொத்த நிதி ஒதுக்கமான கோரிக்கை எண்.60-ன் கீழ் ஒதுக்கப்படும் என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படுவதற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்களின் முன்னேற்றமே தமிழகத்தின் முன்னேற்றமாக இருக்க முடியும் என்ற வகையில் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விதைக்கின்ற விதையும் பாய்கின்ற நீரும் பயன் அளிப்பது போல இம்மானியக் கோரிக்கையின் வாயிலாகக் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மக்கள் வாழ்வில் ஏற்றம் தரும் என்பதில் ஐயம் இல்லை.

**- சட்டப்பேரவையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து 13.4.99 அன்று ஆற்றிய உரையிலிருந்து...**

★ ★ ★

# கால்நடை பராமரிப்பு





வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றங்களுக்குத் தக்கவாறு மிகுந்த பயன்களை விரைந்துத் தரக்கூடிய வீரிய உயர்ரகக் கலப்பின கால்நடைகளை உருவாக்கி அதன்மூலம், பால், முட்டை, இறைச்சி போன்ற புரதச்சத்து மிக்க உணவுத் தேவைகளை நிறைவு செய்யவும் கால்நடைகளிலிருந்து கிடைக்கின்ற உபரிப் பொருள்களான தோல், எலும்பு, சாணம், கொம்பு, ரோமம் போன்ற பயன் தரத்தக்க பொருள்களின் பெருக்கம் கண்டு அதன் அடிப்படையில் சமூக, பொருளாதாரத்தில் வளர்ச்சி காணவும், அந்த அடிப்படையிலே நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஈடுகாணவும் இந்தத்துறை சிறப்போடு பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *இரு இயக்குநர்கள் பதவி*

நீண்ட நெடிய காலமாக ஒரே இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இந்த கால்நடை பராமரிப்புத்துறை இந்தத் துறையின் செயல்பாடுகள் தீவிரமாக்கப்பட வேண்டும். முனைப்போடு செயல்பட்டு மக்களுக்கு விரைந்து பயன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த கால்நடை பராமரிப்புத்துறையின் மீதும் தன்னுடைய கனிவான பார்வையைச் செலுத்தி மேலும் ஒரு இயக்குநர் பதவியை தோற்றுவித்து தமிழகத்திலே சுமார் 10,500 ஏக்கர் நிலப் பரப்பளவு கொண்ட 8 மாட்டுப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், மத்திய மாநில அரசுகளில் சிறப்பு கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற பிரிவிற்கு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் என்றும்.

### *கால்நடை மருத்துவ பணிகள் துறை இயக்குநர்*

அதேபோல் மருந்தகம், மருத்துவமனை, பெரு மருத்துவமனை போன்ற 996 கால்நடை மருத்துவ நிலையங்களையும் 383 ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை விரிவாக்க மருந்தக நிலையங்களையும் கோட்ட அளவிலான 54 நடமாடும் வாகனப் பிரிவு மருந்தகங்களையும் இங்கே ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 2126 கால்நடை கிளை நிலையங்களையும், அதற்கு இணையாக 2126 பார்வை கிளை நிலையங்களையும், 3510 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களையும் கொண்ட அந்தப் பிரிவிற்கு கால்நடை மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் என்றும் நியமித்து சிறப்பாக செயல்பட ஆணையிட்டிருக்கிறார்கள்.

1969-70ஆம் ஆண்டு முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர்



கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
**புலவர் திரு. செங்குட்டுவன்**

கலைஞர் அவர்கள் வேளாண்மைத் துறையிலே உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண பசுமைப்புரட்சியை தோற்றுவித்ததைப் போல கால்நடைப் பராமரிப்புத் துறையில் பால், முட்டை உற்பத்தியில் வெண்மைப் புரட்சியையும்,

அதேபோல மீன்வளத்துறையின் நீலப்புரட்சியையும் தோற்றுவித்து இன்றைய தினம் அதனுடைய பெருக்கங்களின் அடிப்படையில் இந்தியாவிலேயே பால், முட்டை, இறைச்சி உற்பத்தியில் இரண்டாவது மாநிலமாக இருக்கின்றது.

அதுபோல கால்நடைத்துறை, கால்நடை மருத்துவத்துறை ஆகியவற்றில் கால்நடை மருத்துவத்தின் சிறப்பான செயல்பாடுகளைக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால் ஜெர்சி, பிரிசியன், சிந்தி போன்ற வெளி நாட்டினம் ஓங்கோல், காங்கேயம், தார்ப்பார்க்கர், உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டினங்களிலும் வீரியமிக்க கலப்பினங்களை உருவாக்க 1995-96இல் செய்யப்பட்ட செயற்கை முறை கருவூட்டல் 25,73,287 சினை ஊசிகள், 1998-99இல் போடப்பட்ட அந்தக் கருவூட்டல் சினை ஊசிகள் 29,65,714 முந்தைய ஆட்சியைவிட கடந்த ஆண்டு கூடுதலாகச் செய்யப்பட்ட கருவூட்டல் பணிகள் 3,92,427 செயற்கை முறை கருவூட்டல் அதிகமாக செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோல கால்நடைகளுக்குச் சிகிச்சை குதிரைகள், மாடுகள், ஆடுகள், நாயினம் ஆகியவைகளுக்கு 1995-96இல் சிகிச்சையளிக்கப்பட்டது, 1,42,63,661; 1998-99இல் சிகிச்சையளிக்கப்பட்டது 1,46,40,151. 3,76,490 கூடுதலாகக் கிடைத்திருக்கிறது.

### கோழிக் கழிச்சல் தடுப்பூசி

கோழிகளைத் தாக்கக்கூடிய கோழிக் கழிச்சல் நோயைத் தடுப்பதற்காக 1995-96இல் போடப்பட்ட தடுப்பூசி 1,00,10,000, 1998-99இல் கோழிகளுக்கு போடப்பட்ட தடுப்பூசி 1,44,00,000. எனவே 43,90,000 தடுப்பூசி கடந்த ஆண்டு கூடுதலாகப் போடப்பட்டிருக்கிறது.

அதைப்போல கால்நடை நிலையங்களுக்கு வெகு தொலைவில் உள்ள குக்கிராமங்களில் கால்நடை மருத்துவர்கள் அந்தந்த கிராமங்களில் குழுவாகச் சென்று மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தது. 1995-96இல் 30,148 கிராமங்களில் நடைபெற்றன. 1998-99இல் 34,189 கிராமங்கள். கூடுதலாக 4,041 கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன.

அதைப்போல புதிய பெருமருத்துவ மனைகள் தோற்றுவித்தல் இந்த மூன்றாண்டு காலத்தில் கால் நடைகளுக்கு எக்ஸ்ரே மற்றும் அனைத்து வசதிகளும் கூடிய அறுவைச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளக் கூடிய வகையில் கரூர், திருவாரூர், ஊட்டி ஆகிய இடங்களில் புதிய பெருமருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### கலைஞர் ஆட்சியில் அதிக மருத்துவமனைகள்

விழுப்புரத்தில் கால்நடைகளுக்கு புதியதாக நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவ நிலையங்களைப் பற்றி எடுத்துக் கொண்டால், மருந்தகம், மருத்துவமனை போன்ற கால்நடை மருத்துவ நிலையங்கள், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் தோற்றுவிக்கப் பட்டவை 106 மட்டுமேதான். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்பு இந்த மூன்று ஆண்டு காலத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மருந்தகம், மருத்துவமனை, பெருமருத்துவமனை போன்ற கால்நடை மருந்தகங்கள் 163. இந்த ஆண்டு பகுதி 2 திட்டத்தில் புதியதாக தொடங்க முதல்வர் அனுமதி அளித்துள்ளது 10. ஆக மொத்தம் 173. இந்த மூன்று ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்டது மிகப் பெரிய சாதனை இல்லையா?

### புதிய பார்வைக் கிளை நிலையங்கள்

அதைப்போல, புதிய பார்வைக் கிளை நிலையங்கள் 2126. சென்ற ஆண்டு உருவாக்க ஆணையிட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

அதைப்போல, மருந்துகள் இங்கே பல்வேறு நிலையங்களுக்குப் போதாது என்று சொன்னார்கள். 1995-96இல் கால்நடைகளுக்கு மருந்து வாங்க அரசு அனுமதித்த ரூ.5 கோடி மட்டுமே. 1998-99இல் கலைஞர் ஆட்சி வந்த பின்பு ரூ.3 கோடி உயர்த்தி ரூ.8 கோடிக்கு இன்றைய தினம் அதிகமாக மருந்து வாங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, பணியாளர்கள் நலனை எடுத்துக் கொண்டால் கலைஞர் ஆட்சி ஏற்பட்ட பின்பு கால்நடை



பட்டதாரிகள் வேலை வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தேர்வாணைக் குழு மூலம் 174 பேர் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

பத்தாண்டுகளுக்கு மேல் கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிப் பணியாளர்களாக பணியாற்றியவர்களில், கருணை உள்ளத்தோடு முதல்வர் அவர்கள் 826 பேர்களை நிரந்தரமாக்க உத்தரவிட்டார்கள். அதன்படி சென்ற ஆண்டு 759 பேருக்கு, இந்த ஆண்டு 67 பேருக்கு ஆணை வழங்கப்பட்டது.

அதைப்போல கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சி. உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்த மூன்று ஆண்டு காலத்தில் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களில் கல்வித் தகுதி பெற்றவர்கள் 275 பேர்களுக்கு ஒரத்த நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடித்தவர்களுக்கு பணி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 125 பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு 11 மாத பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

### *உயர்ரக பொலி காளைகள்*

வீரியக் கலப்பினங்களை உருவாக்க, 1998-99இல் 31 பொலிகாளைகள் நாளொன்றுக்கு 20 லிட்டருக்கு மேல் பால் தரக்கூடிய இனங்களான ஜெர்ஸி, ஹோல் ஸ்டின், பிரிசியன் ஆகியவை ரூ.41 இலட்சங்களில் வாங்கப்பட்டுள்ளன. ஒரு பொலி காளையில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 8000 சினை ஊசிகள் கருவூட்டலுக்காக தயாரிக்கப்படுகின்றன.

அதைப்போல சென்ற ஆண்டு, 1998-99இல் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றுக்கு 20 பயனாளிகள் வீதம் 22 ஊராட்சிகளில் 440 பேருக்கு கிடாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

### *தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம்*

அதைப்போல தீவிர ஆடு வளர்ப்புத் திட்டத்தில் 1998-99ஆம் ஆண்டில் விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணா மலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ.3.55 இலட்சம் செலவில் 50 பயனாளிகளுக்கும் ஒருவருக்கும் 10 கிடாக்குட்டிகள் வீதம் 500 கிடாக்குட்டிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

செல்லப் பிராணிகளாக நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் சிகிச்சைக்கு வரும்பொழுது அனுமதிக் கட்டணம் ரூ.5ம் மருத்துவச் செலவுக் கட்டணம் ரூ.5ம் வசூலிக்கப்பட்டு வந்தது. இக்கட்டணங்களை 1996 டிசம்பர் முதல் இந்த அரசு அறவே இரத்துச் செய்து ஆணை வழங்கி இருக்கிறது.

அதைப்போல கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கப்பணி மேற்கொள்வதால் கால்நடை வளர்ச்சி அதிகரிப்பதுடன், அதன் உற்பத்தித் திறனும் கூடுகிறது. இதற்காக குடற்புழு நீக்கம் செய்ய வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ.1 ரத்து செய்யப்பட்டு, 1998-99ல் மட்டும் 1,00,14,289 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறது.

### *கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்*

இந்தப் பல்கலைக் கழகம் முதன்முதலாக இந்தியாவிலே மட்டுமல்ல, ஆசியா கண்டத்திலேயே கலைஞர் அவர்கள்தான் தோற்றுவித்து கால்நடைகளின் மேலுள்ள சிறப்பான கனிவைத் தெரிவித்தார்கள். 1989ஆம் ஆண்டு துவக்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழகம், 1997ஆம் ஆண்டு வரை அதற்கு கட்டடம் கட்டப்பட்டு துவக்கப்படவில்லை.

கலைஞர் அவர்கள் 1996இல் பொறுப்பேற்ற பின்பு 80 இலட்சம் ரூபாய் அதற்கு வழங்கி, இன்றைய தினம் கட்டடம் முடிவுற்று சென்ற ஆண்டு அதை திறந்து வைத்தார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் அந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் பருவ கட்டணம் ரூ.1500லிருந்து ரூ.1000ஆக கடந்த ஆண்டு குறைக்கப்பட்டது.

### *பயிற்சி கால உதவித் தொகை உயர்வு*

பி.வி.எஸ்ஸி. இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி கால உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.250 ஆக இருந்ததை ரூ.750 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புற மாணவர்களுக்கு பி.எஸ்.ஸி. பட்டப் படிப்பில் சேர 15 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகை மூலம் சிறந்த மாணவர்களுக்கு கல்வி பயில முழு உதவித்தொகை வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் சிறந்த மைய ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. அதைப்போல மனிதவள மேம்பாட்டுத் திட்டம், சிகிச்சைப் பணிகள், பயிற்சி மையங்கள் எல்லாம் இந்தப் பல்கலைக்கழகத்திலே செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பராமரிக்கப்படும் பால் மறந்த கன்றுகள் நல்ல தீவனம் அளிக்காமல் தேவையான பராமரிப்பு இல்லாமல் குறைந்த வளர்ச்சி உள்ளதாக நல்ல பால் தரும் தன்மை குறைந்து உள்ளதால், பால் இன மாடுகள் வளர்ப்பில் முன்னோடியாக உள்ள அரியானா மாநிலத்தில் உள்ள கர்னாலைச் சுற்றியுள்ள தனியார் விவசாயிகள் பால் பண்ணைகளில் நல்ல பால் தரவல்ல கருவுற்ற பசுங் கிடேரிகளை வாங்கி வழங்கினால் அவை கன்றுகள் ஈனும்போது நமது தட்பவெப்ப நிலைக்கு ஒத்துப் போய் குறைந்த விலையில் பெறப்பெற்ற ஒரு நல்ல பசுவாக பயனாளி வைத்து பராமரித்து பலனடைய ஏதுவாக அமையும் என்ற அடிப்படையில் 12 கோடியே 38 இலட்ச ரூபாயை மைய அரசு தந்திருக்கிறது.

இந்த12 கோடியே 38 இலட்ச ரூபாயில் மானியமாக 6,64,03,500 ரூபாயைத் தந்திருக்கிறார்கள். இதிலே 1000 கருவுற்ற பசுங் கிடேரிக்கன்றுகள் அரியானா மாநிலத்திலிருந்துதான் வாங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையோடு தந்திருக்கிறார்கள். இந்தப் பசுக்களை எப்படி வழங்க வேண்டுமென்று சொன்னால், ஒரு திட்டத்தினுடைய மதிப்பீடு ரூ.15,000 என்று சொன்னால் 7,500 ரூபாயை அரசு மானியமாகத் தருகிறது. அதற்கு காப்பீடு



உறுதித் தொகையைத் தருகிறது. மீதித் தொகையை வங்கிக் கடன் மூலமாக ஈடு செய்ய வேண்டுமென்று 1000 பசுங் கிடேரிக் கன்றுகள் ஆதிதிராவிடர்களுக்காக இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே வழங்கப்பட இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *செம்மறியாடுகள் வழங்கப்படும்*

அதைப்போல தமிழ்நாடு முழுவதும் 2,700 ஆதிதிராவிடர்களுக்கு 56,700 செம்மறி ஆடுகள் வழங்கப்பட இருக்கிறது. மிகப் பெரிய சிறப்பான ஒரு திட்டம்.

அதைப்போல 2,700 பேருக்கு 29,700 வெள்ளாடுகளும் வழங்கப்பட இருக்கின்றது. ஏறக்குறைய 80,000 வெள்ளாடு, செம்மறியாடுகள் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறப்பான திட்டத்தினை தமிழ்நாட்டிலே கலைஞருடைய அரசு இந்த ஆண்டு நிறைவேற்றும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *புதிய திட்டங்கள்*

புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல், ஒரத்தநாட்டிலுள்ள பயிற்சி மையத்தினை வலுப்படுத்துதல், 9 இலட்சம் செலவில் தீவன புல்கரணைகளை உற்பத்தி செய்வதற்காக கால்நடை தீவன விதை உற்பத்திப் பிரிவை வலுப்படுத்துதல், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தில் ஊசி மருந்துத் தயாரிப்பதற்குரிய மருந்தாக்கியல் பிரிவை விரிவுபடுத்தல், இதற்கு 20 இலட்சம் ரூபாய்; மேலாண்மை தகவல் முறைகளை நவீனப் படுத்துதல், 10 இலட்சம் ரூபாய்; மாதவரத்தில் உள்ள கொள்ளை நோய் தடுப்பூசி மருந்து ஆராய்ச்சி மையத்தை வலுப்படுத்த 5.50 இலட்சம் ரூபாய்; மாதவரம் மத்திய பல்கலைக்கழக ஆய்வுக் கூடத்தில் உள்ள நச்சு ஆய்வியல் பிரிவை வலுப்படுத்த 17 இலட்சம் ரூபாய்; நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் சிறிய விலங்குகளுக்கான அறுவை சிகிச்சைக் கூடத்தை ஏற்படுத்த 8.87 இலட்சம் ரூபாய்.

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் இறைச்சித் தொழில் நுட்பவியல் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்த 15.54 இலட்சம் ரூபாய்; மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் நச்சுக் கிருமிகளால் பரவும் நோய்களைக் கண்டறிவதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த 12.05 இலட்சம் ரூபாய்; தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் குறித்து மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.2.89 இலட்சம்; காட்டுப்பாக்கம், கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் போயர் வெள்ளாடு வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்த - 8.05 இலட்சம், ஆக மொத்தம் 156 இலட்சங்கள் செலவில் இந்தப் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

### *வெறிநாய்களை கட்டுப்படுத்த திட்டம்*

தமிழகத்தில் நல்ல நாய்கள் மறைந்து வெறிநாய்கள் அண்மைக் காலத்தில் அதிகமாகத் தோன்றிக் கொண்டிருக் கின்றன. அந்த வெறி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக 4.35 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.

எனவே, பல்வேறு திட்டங்களை யெல்லாம் இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையிலே செயல்படுத்த இருக்கிறோம்.

கால்நடைப் பராமரிப்புத்துறை பீடுநடை போடும் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

***

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

# கோ-ஆப்டெக்ஸின் வண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்.





கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23







